# கொழுந்து

38

ISSN 2012 - 7286

நவம்பர்
டிசம்பர்
2013

## மலையகக் கல்வி அபிவிருத்தி மன்றத்தின்
## முப்பெரும் விழா ~ விஷேட சிறப்பிதழ்



### மதுரையில் நூல் வெளியீடு






சிறுகதைப் போட்டி பரிசளிப்பு
சான்றோர்கள் கௌரவம்
விபரங்கள் உள்ளே...

### அடிமை
### இருளகற்றிய
### ஆதவன்

## விருதுகளுக்கு விலைமதிப்பை உண்டாக்கிய மலையக நட்சத்திரம்

Reg. G.A. 2341

UEDS

# மலையகக் கல்வி அபிவிருத்தி மன்றம்
# කඳුරට අධ්‍යාපන සංවර්ධන සංගමය
# UPCOUNTRY EDUCATION DEVELOPMENT SOCIETY

## COLOMBO

**One percent of our Earnings to Enhance..**
**Education of Our Next Generation...**

கல்விக் கண் திறப்போம்... கற்போருக்கு கரம் கொடுப்போம்

No. 189, 3rd Floor, Sea Street, Colombo - 11.
Tel : 011-2424886 Tele/Fax : 011- 2388566
E-mail : arivoliorg@gmail.com Website : www.arivoli.org

அறிவொளி பரவட்டும்

Find us on: facebook

Arivoli
DESIGN - PRINT - PUBLISH
Graphics

ISSN : 2012-7286

# கொழுந்து 38



ஆசிரியர் - அந்தனி ஜீவா

57, மகிந்த பிளேஸ், கொழும்பு 06, இலங்கை
கைபேசி : 0776612315
மின்னஞ்சல் : kolundu@gmail.com

விலை
ரூபா 50/=

## அரவணைப்பும்... புறக்கணிப்பும்...!

தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழகத்தின் அயல் நாட்டுத் தமிழ்க் கல்வித் துறை, அயல்நாடுகளில் தமிழ் நாடகங்கள் என்ற பன்னாட்டு கருத்தரங்கொன்றை கடந்த 2013 அக்டோபர் 25, 26ஆம் திகதிகளில் நடத்தியுள்ளதை அறிந்த போது, நலிவடைந்துவரும் தமிழ் நாடகத்துறைக்கு இதுவொரு பயன்மிக்க செயற்பாடு என்பதால் மகிழ்ச்சியடைகிறோம்.

அதற்காக தஞ்சை தமிழ் பல்கலைக்கழகத்திற்கும், அதன் அயல்நாட்டு கல்வித்துறைக்கும் எமது மனமார்ந்த பாராட்டுக்கள். அதேவேளை, நாடகக் கலையை உயிராக நேசித்து, அதன் வளர்ச்சிக்கு அர்ப்பணிப்புடன் செயலாற்றி வரும் கலைஞர்கள் மத்தியில், சிறு சலசலப்பு ஏற்பட்டதை சொல்லித்தான் ஆகவேண்டும்.

மேற்படி நாடகக் கருத்தரங்கை மொரிசியஸ், சிங்கப்பூர், மலேசியா, இலங்கை ஆகிய நாடுகளிலுள்ள மேடைநாடகங்களைப் பற்றி - அதாவது அரங்க ஆற்றுகைகளைப் பற்றி ஆய்வுக் கட்டுரைகள் வாசிக்கப்பட்டுள்ளன.

இலங்கையைச் சேர்ந்த நாடகத்துறையில் அதிக ஈடுபாடுடைய, அளப்பரிய சேவை செய்துள்ள, அரங்கக் கலையின் வளர்ச்சியில் ஆளுமைகளை நிலைநிறுத்தியுள்ள பேராசிரியர் மௌனகுருவின் சங்காரம், குழந்தை ம. சண்முக லிங்கத்தின் மண் சுமந்த மேனியர், கலைஞர் கலைச்செல்வனின் ஒரு கலைஞனின் கதை, அந்தனிஜீவாவின் அக்கினிப் பூக்கள், அமரர் அ.ந. கந்தசாமியின் மதமாற்றம், புலம்பெயர்ந்து வாழும் கந்தன் கருணை ஆகிய படையல்களைப்பற்றி ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இதற்காக முயற்சி எடுத்த ஞானம் ஆசிரியர் தி. ஞானசேகரம் அவர்களையும் பாராட்டுகின்றோம்.

ஆனால் இக்கருத்தரங்கில் மேற்கூறிய இலங்கை நாடகப் படைப்பாளிகளைத் தவிர ஏனைய நாடுகளிலுள்ள, நாடகத்துறை சம்பந்தப்பட்டவர்கள் மட்டுமே வரவழைக்கப் பட்டுள்ளார்கள்.

நவீன நாடக வளர்ச்சியில் அதிக அக்கறையும் - ஈடுபாடும் கொண்டு பரீட்சார்த்தமான பல முயற்சிகளை முன்னெடுப்பதில் தமிழ் நாட்டையும் முந்திக்கொண்டு, செயல்படும் அரங்கச் செயல்பாட்டாளர்களை இக்கருத்தரங்கில் பங்குகொள்ளச் செய்யாதது மட்டுமின்றி ஓர் அழைப்புத்தானும் அனுப்பாமல் விட்டது ஏன்?

ஒருபக்கம் அரவணைப்பு ! மறுபக்கம் புறக்கணிப்பா? சம்பந்தப்பட்டவர்கள் சிந்திப்பார்களா?

- ஆசிரியர்

ஓவியம்
கலாபூசணம் எஸ்.டி.சாமி

கணனிப் பதிவு :
இராஜலிங்கம் புஸ்பராஜ்
(அருண்)

வடிவமைப்பு :
கலைஞர் கலைச்செல்வன்

# மலையகக் கல்வி அபிவிருத்தி மன்றத்தின் இலட்சியப் பணிகளும் எதிர்கால செயற்திட்டங்களும்

த. தனராஜ்
இணை பணிப்பாளர் / நிர்வாக உட்கட்டமைப்பாளர்

மலையகக் கல்வி அபிவிருத்தி மன்றம் கடந்த எட்டு ஆண்டுகளுக்கு முன்பு மலையகத்தில் கல்வியில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்துடன் உருவாக்கப்பட்ட ஒரு அமைப்பாகும். முதல் இரண்டு ஆண்டுகள் பல சவால்களுக்கு முகம் கொடுத்தாலும் அதன் பின்னர் ஒவ்வொரு படியாக பல வெற்றிகளைப் பெற்று வருகின்றது. உண்மையில் நாங்கள் ஆரம்பித்ததன் நோக்கம் குறுகிய சில ஆண்டுகளிலே நிறைவேறி வருகின்றதைக் கண்டு உண்மையில் மகிழ்ச்சியடைகின்றோம். எம்மால் உருவாக்கப்பட்ட பலர், ஆசிரியர்களாக, வழக்கறிஞர்களாக, பொறியியலாளர்களாக, கணக்காளர்களாக, ஊடகவியலாளர்களாக உருவாகி உள்ளமையும், அவர்களை எம்முடன் இணைத்து சேவை செய்ய கைகோர்த்து வருகின்றமையும் எம்மை மகிழ்ச்சிப்படுத்துகின்றது.

மலையகக் கல்வி அபிவிருத்தி மன்றத்தைத் தொடர்ந்து வரும் காலங்களில் பல உயர் கல்வி கற்ற இளைஞர்களும், கல்விமான்களும், தொழில் அதிபர்களும், வெற்றியுடன் நடாத்த காத்திருப்பது எமக்கு மேலும் நம்பிக்கையை ஊட்டுகின்றது.


நாம் ஆரம்பித்த 2006 ஆம் ஆண்டு முதல் 2007ஆம் ஆண்டு வரையிலான ஒரு வகுப்பிற்கு சுமார் ஐம்பதாயிரம் செலவு செய்திருந்தோம்.

அதேபோல், 2011 முதல் 2012 வரையான ஒரு வருடத்தில் சுமார் 48 இலட்சம் ரூபாவை மலையகக் கல்வி அபிவிருத்திக்காக செலவு செய்திருப்பதானது எமது பெறும் வளர்ச்சி எப்படியானது என்பதை ஊகிக்க முடியும். இவ்வளவு வெற்றிக்கும், எமது சமூகத்தின்மீது அக்கறை உள்ள அங்கத்தவர்களும், போஷகர்களுமே பிரதான காரணமாகும்.

**மலையகக் கல்வி அபிவிருத்தி மன்றத்தின்**



தலைவர்
கே. சிவசுப்பிரமணியம் JP



செயலாளர்
ஏ. பாஸ்கரன்

அடுத்த 2014ஆம் ஆண்டு எமது பாரிய இலக்கானது, நாம் ஆரம்பித்ததன் நோக்கத்தை நிறைவேற்றுவதாக அமைய உள்ளது.

அதாவது இவ்வாண்டு சாதாரண தரத்தில் விஞ்ஞான பாடத்தில் சித்தி எய்தும் சுமார் பத்து மாணவர்களுக்கு தங்குமிட வசதியுடன் கொழும்பில் உள்ள சிறந்த பாடசாலைகளில் கல்வி கற்பித்து, அவர்கள் ஒரு வைத்தியராக வெளிவரும் வரையில் புலமைப்பரிசில்களை வழங்கவுள்ளது.

இத்திட்டமானது, ஒவ்வொரு ஆண்டும் நடைமுறைப்படுத்தப்பட்டு, ஐந்து ஆண்டுகளுக்கு பின்னர் ஒவ்வொரு ஆண்டும் மலையகத்தில் இருந்து பத்து மாணவர்கள் வெளிவருவது உறுதிப்படுத்தப்படும். இதற்கான பாரிய ஒரு செலவையும், சிரமத்தையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

**எம்மவர் கல்வி உயர்ந்திட எம்முடன் இணைவீர்**

எம்மோடு சமூக அக்கறையுள்ள பலர் இணைந்து கொள்வார்கள் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கையுடன் இத்திட்டத்தை எவ்வித தயக்கமும் இல்லாமல் ஆரம்பித்துள்ளோம். சிறந்த வெற்றியை பெறுவோம் என்பதிலும் எவ்வித அச்சமும் இல்லை.

அதே போல சாதாரண தர மாணவர்களுக்கு ஜனவரி மாதம் முதல் ஒவ்வொரு மாதமும், கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கு பரீட்சைகளை நடாத்த ஏற்பாடுகளை செய்து வருகின்றோம். இதன் மூலம் சாதாரண தர மாணவர்கள் சித்தியடைவதை உறுதிப் படுத்தமுடியும்.

இவைபோன்ற பல திட்டங்கள் மலையகக் கல்வி அபிவிருத்தி மன்றத்திடம் மலையகக் கல்வியை உயர்த்த காத்துக் கிடக்கின்றது. இவை அனைத்திற்கும், நலன்விரும்பிகள், அங்கத்தவர்களினதும், போஷகர்களினதும், தொடர்ந்து வழங்கி வந்ததைப் போல எதிர்காலத்திலும், எம்மவர் கல்வி உயர்ந்திட எம்முடன் இணைவீர்கள் என்ற பெரும் நம்பிக்கையில் காத்திருக்கின்றது. காலம் கணியும் நாள் வெகுதொலைவில் இல்லை

*We Wish...* **Mupperum Viza** *All Success!*
MOHAMAD IDRIS BROS. KIBS கிப்ஸ் HANDLOOM TEXTILES KIBS HOUSE
**SASICO TEX**
Wholesale & Retail Dealers in Textiles
Authorised Distributors for Original KIBS Products
Lucky Paradise Super Market, No. 53/A 12, Keyzer Street, Colombo 11, Sri Lanka.
Tel : +94 11 2432850 Fax : +94 11 2471719 Mobile : +94 77 7769037

மலையக மக்களின்...

# அடிமை இருளகற்றிய ஆதவன்

தேயிலைக் காடுகளிலும் மலை முகடுகளிலும் தேயிலைக்கு பசுமையையும், தேநீருக்கு சாயத்தையும் தந்த மக்கள், கொட்டும் பனியிலும் அட்டைக்கடியிலும் அடிமைகளாக வாய்ப்பேச முடியாத ஊமைகளாக விடியலுக்கு முன் உழைப்பிற்கு சென்று இருள் கவிழ்ந்த பின்னர் வீட்டிற்கு திரும்புகின்ற இழிந்த நிலையில் ஏமாளிகளாக மலை சூழ்ந்த தேயிலைக் காடுகளில் இந்திய மண்ணின் மைந்தர்கள்.

காட்டையும் மேட்டையும் சீர்படுத்தி பசுமை பூத்துக் குலுங்கும் சித்திரச் சோலைகளாக - இரத்த வியர்வை சிந்தி பொன் கொழிக்கும் பூமியாக மாற்றியவர்களின் வாழ்வில் ஒளியில்லை. வஞ்சிக்கப்பட்ட நிலையில் திக்கற்றவர்களாக துன்பக்கேணியில் பெரும் துயரத்துடன் வாழ்ந்தார்கள்.

இந்த இழிநிலை தொடர்ந்தது. ஒன்றல்ல... இரண்டல்ல நூறு ஆண்டுகளாக இந்த மக்கள் இங்கு வந்து குடியேறிய நூற்றாண்டுகளுக்கு பின்னரே அதாவது 1932ஆம் ஆண்டிலே தான் பெருந்தோட்டத்து துறையில் முதன் முதலில் ஒரு குரல் ஒலித்தது.



தோட்டத்தொழிலாளர்களுக்காக தொழிற்சங்கம் அமைத்த முன்னோடி, "கோ. நடேசய்யர்"

அந்த குரல் இலங்கை சட்டசபையிலும் ஒலித்தது. அந்தக் குரலுக்கு உரியவர்தான் முதன் முதலாக தோட்டத் தொழிலாளர்களுக்காக தொழிற்சங்கம் அமைத்தவர். அவர்தான் பத்திரிகையாளர் கோ. நடேசய்யர். கோ. நடேசய்யர் மிகப்பெரிய செயல் வீரர். இந்த நாட்டின் தொழிற்சங்க வரலாற்றிலும் பத்திரிகை வெளியீட்டுத்துறையிலும் அரசியல் வாழ்விலும் மலையக இலக்கிய வளர்ச்சிக்கும் கணிசமான பங்களிப்பை செய்தவர்.

இலங்கை வாழ் இந்திய வம்சாவளியினரின் முன்னேற்றத்திற்காக முன்னோடியாக திகழ்ந்த கோ. நடேசய்யர் வரலாற்று புகழ் மிக்க தஞ்சாவூரில் 1891ஆம் ஆண்டு பிறந்தவர். தென்னிந்திய பிராமண சமூகத்தைச் சார்ந்த இவர் தஞ்சாவூரில் அரசாங்க உத்தியோகத்தராக பணியாற்றிய பின்னர் பத்திரிகை ஒன்றில் ஆசிரியராக பணியாற்றிய பொழுது தென்னிந்திய வர்த்தகர் ஆண்டு விழாவில் கலந்து கொள்ள 1919 ஆம் ஆண்டு கொழும்புக்கு வந்தார்.

இலங்கைக்கு வருகை தந்த நடேசய்யர் தேயிலைத் தோட்டங்களில் வாழ்கின்ற இந்தியர்களின் நிலைமைகளை நேரில் கண்டறிய விரும்பினார். அந்த காலகட்டத்தில் தோட்டங்களுக்கு வெளியார் யாரும் செல்ல முடியாத சூழ்நிலை. புடைவை வியாபாரிகள் மட்டும் செல்வது வழக்கம். நடேசய்யர் புடைவை வியாபாரியாக மாறினார். புடைவை வியாபாரிகளுடன் சேர்ந்து தோட்டங்களுக்கு சென்றார். தம் மக்கள் படும் துன்ப துயரங்களை நேரில் கண்டு அறிந்தார். இந்தியா திரும்பியதும் இலங்கையில் தோட்டத் தொழிலாளருக்கு இழைக்கப்படும் அநீதிகளை சிறு பிரசுரமாக அச்சிட்டு விநியோகித்தார். தஞ்சாவூர் காங்கிரஸ் கமிட்டியிடம் தனது பிரசுரத்தையும் விளக்கமான அறிக்கையையும் சமர்ப்பித்தார். இந்த பாவப்பட்ட மக்களின் மீட்சிக்காக மீண்டும் 1920ஆம் ஆண்டு இலங்கைக்கு இவருடன் இவர் துணைவியாரான மீனாட்சி அம்மையாரும் வந்தார்.

இலங்கைக்கு வருகை தந்த நடேசய்யர் கொழும்பு நகரின் இந்தியர்களோடு சேர்ந்து இயங்க ஆரம்பித்தார். இலங்கை தேசிய நிர்வாகக்குழு உறுப்பினராக இருந்த டாக்டர் ரட்ணம் அருளானந்தம் அவர்களை வெளியீட்டாளராக கொண்ட "தேசநேசன்" ஆசிரியர் பொறுப்பை ஏற்றார். சிட்டிசன் என்ற ஆங்கில ஏட்டின் பொறுப்பாசிரியராக செயற்பட்டார்.

கோ. நடேசய்யர் வெறும் பத்திரிகை ஆசிரியராக மட்டும் இருக்க விரும்பவில்லை. தொழிற்சங்க வாதியான ஏ. ஈ. குணசிங்காவுடன் இணைந்து தொழிற்சங்க பணிகளில் ஈடுபட்டார். தமிழகத்தில் வி.க.வின் தொழிற்சங்க பணிகளை அறிந்திருந்த நடேசய்யர் தொழிற்சங்க பணிகளில் ஈடுபாட்டுடன் உழைத்தார். 1928ஆம் ஆண்டு குணசிங்காவின் இந்திய எதிர்ப்பு நடவடிக்கை காரணமாக நடேசய்யர் அவரை விட்டு விலகினார். தோட்டத் தொழிலாளர்களின் உரிமைக்காக போராட முடிவு செய்தார். அவர்கள் அனைவரையும் ஓரணியில் திரட்ட அகில இலங்கை இந்தியத் தோட்டத்தொழிலாளர் சங்கம் என்ற அமைப்பை ஏற்படுத்தினார். அதனால் தன் வாழ்விடத்தை அட்டனில் அமைத்துக்கொண்டார். 1936இல் நடந்த அரசாங்க சபைத் தேர்தலில் நடேசய்யர் போட்டியிட்டு வெற்றி பெற்றார். இத்தேர்தலில் இடதுசாரித் தலைவர்களான டாக்டர் என். எம். பெரேரா, பிலிப் குணவர்தன ஆகிய இருவரும் முதல் தடவையாக அரசாங்க சபைக்கு தெரிவானார்கள். இவர்களுடன் நடேசய்யரும் இணைந்து செயல்பட்டார். அப்பொழுது அமைச்சராக இருந்த எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்க நடேசய்யரின் வாதத்திறமைக்கும் அரசியல் விவேகத்திற்கும் தீர்க்க தரிசனமான கருத்துக்களுக்கும் மதிப்பளித்தார்.

நடேசய்யரின் பத்திரிகைப் பணி போற்றுதலுக்குரியது. எனக்கு சட்ட சபை பெரிதல்ல. பத்திரிகைதான் பெரிது. நான் சட்ட சபைக்குப்போய் செய்யக் கூடிய நன்மைகளை விட பன்மடங்கு அதிக நன்மை பத்திரிகையால் ஏற்படக்கூடும். இவ்வாறு நடேசய்யர் ஆசிரியராக இருந்த தேசபக்தனில் குறிப்பிடுகின்றார். தேசநேசன் (1921), தேச பக்தன் (1924), தொழிலாளி (1929), தோட்டத் தொழிலாளி (1937), உரிமைப்போர், சுதந்திரப்போர், வீரன், சுதந்திரன், என்று தமிழிலும், சிட்டிசன் (1922), போர்வாட் (1926), இந்தியன் ஒபீனியன் (1936), இந்தியன் எஸ்டேட் லேபர் (1929) என்று ஆங்கிலத்திலும் வெளிவந்த பத்திரிகை அனைத்திற்கும் நடேசய்யர் ஆசிரியராக இருந்து நடத்தியுள்ளார்.

இலங்கை வாழ் இந்திய வம்சாவளியினரின் உரிமைக்காகப் போராட மலைநாட்டில் குடியேறி ஆக்க இலக்கிய முயற்சிகள் படைத்து மலையக இலக்கியம் என்ற தனித்துவமான இலக்கியம் உருவாகுவதற்கு பாதை அமைத்துக் கொடுத்து, அந்த பாதையில் நடந்து சென்று வழிகாட்டியர் நடேசய்யர்.

1947 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 7 ஆம் திகதி தனது ஐம்பத்தாறாவது வயதில் நடேசய்யர் அமரரானார். அவரது இறுதிச் சடங்குகளை தமிழ் மக்களின் மதிப்புக்குரிய தலைவர் தந்தை எஸ். ஜே. வி. செல்வநாயகம் முன்னின்று நடத்தினார். கோ. நடேசய்யர் என்ற தனி மனிதனின் சாதனை இலங்கை வாழ் இந்திய வம்சாவளியினரின் வரலாற்றில் ஒரு மைல் கல்லாக அமையும். இலங்கை வாழ் இந்தியத் தமிழர்கள் தங்களைவ வாழ்விக்க வந்த மகானாக கருதினார்கள். இலங்கையின் மகாத்மாவாக வழிபட்டார்கள். கோ. நடேசய்யர் என்ற பெயர் மலையகம் என்ற சொல் இருக்கும் வரையில் நிலைத்திருக்கும்.




## தலைநகரில் தமிழ் நாடக அரங்கு நூல் வெளியீட்டு விழா

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டப வளவில் நடைபெற்ற அகில இலங்கை யிலும் உள்ள தமிழ் சிங்கள எழுத்தாளர்களின் ஒன்றுகூடல் நிகழ்வில் இடம்பெற்ற அந்தனி ஜீவா எழுதிய தலைநகரில் தமிழ் நாடக அரங்கு நூலின் வெளியீட்டு விழாவின் போது, கலாசார கலை அலுவலுகள் அமைச்சின் மேலதிக செய லாளர் திருமதி மல்காந்தி யிடமிருந்து கலைஞர் கலைச் செல்வன் சிறப்புப் பிரதியை பெற்றுக்கொண்ட போது எடுத்த படம். புரவலர் ஹாசிம் உமர், நூலாசிரியர் அந்தனி ஜீவா ஆகியோர் உடன் உள்ளனர்.

## கொழுந்து சிறுகதை போட்டியில் முதலாம் பரிசு பெற்ற கதை

# தீர்ப்பு

– கார்த்திகாயினி சுபேஸ்

'கருவில் இருக்கிற தன் குழந்தையை எந்தத் தாயாவது கொல்லத் துணிவாளா...? ச்சீ... நீயெல்லாம் ஒரு பொம்பிளையா!' தொலைக்காட்சியை சட்டென நிறுத்தினாள் நிவேதா!

தினம் தினம் வேதனைகளையே பிசைந்து கொண்டிருக்கும் மனதினை திசை மாற்றுவதற்காக தொலைக்காட்சியைப் போட்டால் அங்கே சீரியலில் இதே பிரச்சினை ஒளிபரப்பாக - எரிந்து கொண்டிருந்த அவள் மனதுக்கு எண்ணெயை அள்ளி ஊற்றியது. தான் இப்போது என்ன மனநிலையில் இருக்கிறேன் என்பதையே அவளால் புரிந்து கொள்ள முடியாதிருந்தது. இயலாமை, எரிச்சல், கோபம், வேதனை, தனிமை எல்லாம் ஒன்று சேர்ந்து அவளை ஏதேதோ எல்லாம் செய்து கொண்டிருந்தது.



நவீன் வீட்டில் இருந்திருந்தால் ஏதாவது பேசியாவது அவளது மனதினை சற்று வேறு பக்கம் திருப்ப முயற்சி செய்திருப்பான். அவனும் வேலைக்குப் போய்விட்டிருந்தான். எத்தனை நாளைக்குத் தான் அவனும் வேலையை விட்டு ஆஸ்பத்திரி, நீதிமன்றம் என அலைந்து கொண்டிருப்பது. வருமானத்துக்கு வழி பார்க்க வேண்டாமா? இவளும் தற்போது விடுமுறையில் நிற்கும் நிலையில் வருமானம் வேறு கையைக் கடித்துக் கொண்டிருக்கிறது. அவ்வப்போது வந்து அவளுக்கு துணையாக நிற்பதோடு வீட்டு வேலைகளையும் செய்து விட்டுப்போகும் புஷ்பாவையும் இன்று முழுவதும் காணவில்லை.

கையில் இருந்து ரி.வி.ரிமோட்டை கதிரையில் வீசி எறிந்து விட்டு படுக்கையறையினுள் சென்று கட்டிலில் படுத்துக்கொண்டாள்.

எதிரே இருந்த சுவரில் ஒட்டிய போஸ்டர்களில் இருந்து குழந்தைகள் இரண்டும் அவளைப் பார்த்துச் சிரித்தபடி இருந்தன. திருமணமாகி மூன்று வருடங்கள் கழித்து அவள் கருவுற்ற போது... ஆசையாசையாய் குழந்தைகளின் படங்களை வாங்கி தனது படுக்கை அறை சுவரினைச் சுற்றி ஒட்டி வைத்தாள். எந்தப் பக்கம் திரும்பினாலும் அவள் முகத்தைப் பார்த்துச் சிரிக்கும் குழந்தைகள் அவளைச் சந்தோஷப்படுத்திக் கொண்டிருந்தன.

கர்ப்பிணிப் பெண்கள் அழகான குழந்தைகளை அடிக்கடி பார்த்து ரசித்துக் கொண்டிருந்தால் பிறக்கப் போகும் குழந்தையும் அழகாகப் பிறக்கும் என்று பலர் சொல்லி அவள் கேள்விப்பட்டிருக்கிறாள். எத்தனை அழகான குழந்தைகள் அவை. குழந்தைகள் என்றாலே அழகுதானே! என் குழந்தையும் இப்படித்தான் அழகா... என்றெண்ணியவளின் எண்ணங்கள் தடைப்பட்டன. நெஞ்சில் ஏதோவொன்று சுருக்கென்று தைத்துக் கொண்டது. தன் குழந்தையை தானே அழிக்கத் துணிந்தமையும் அதற்கான காரணமும் அவள் நெஞ்சை வேகமாகத் துடிக்கச் செய்ய அடி வயிற்றை மெதுவாகத் தடவிப் பார்த்தாள். குழந்தை மெதுவாக அசைவதை அவளது கைகள் உணர்ந்த போது உடல் சிலிர்த்தது.

தன் குழந்தையையே அழிக்கத் துடிக்கும் கொடுமைக்காரி என எல்லோரும் அவளைச் சொன்னாலும் அந்த செயலில் இருக்கக் கூடிய தாய்மை உணர்வினை யாரும் புரிந்து கொள்கிறார்கள் இல்லையே...? என்ற வருத்தமும் அவளுக்கு இருந்தது. என்னது கருவில் இருக்கும் தன் குழந்தையை கருவிலே அழிப்பது தாய்மை உணர்வா? என கேட்கலாம் அவள் அவ்வாறான முடிவுக்கு வருவதற்கான காரணங்களை வைத்துப் பார்த்தால் அவளைப் பொறுத்த மட்டில் அது நியாயம்; தாய்மை உணர்வின் வெளிப்பாடே தான். அதனால்தான் அவளும் அவள் கணவன் நவீனும் சேர்ந்து கருவைக் கலைப்பதற்கு முடிவெடுத்து அதற்கான அனுமதியை நீதிமன்றத்திடமும் கேட்டிருந்தார்கள். நிவேதாவும் நவீனும் வன்னியைச் சேர்ந்தவர்கள். யுத்தம் காரமாணமாக புலம் பெயர்ந்து இந்தியா சென்று வாழ்பவர்கள்.

உறவுகள் அருகில் இல்லாத நிலையில் இருவரும் வேலைக்குச் சென்று வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்தார்கள். திருமணமாகி நீண்ட காலத்தின் பின் நிவேதா கருவுற்றமை இருவருக்குமே அளவில்லா சந்தோஷத்தைக் கொடுத்தது. உறவுகள் அற்றிருந்த தமக்கு புது உறவொன்று வருவதில் ஆனந்தமடைந்திருந்தவர்களுக்கு கரு இருபது வாரங்களைக் கடந்து போது தான் மருத்துவர்கள் சொன்ன விடயத்தைக் கேட்டு இருவருமே அதிர்ந்து விட்டனர்.

நிவேதாவின் கர்ப்பத்தில் இருக்கும் சிசுவுக்கு இதயக் கோளாறு என்றும் குழந்தை பிறந்துமே பேஸ் மேக்கர்(செயற்கை இதயத்துடிப்புக் கருவி)வைக்கப்பட வேண்டும் என்றும் அதனை அடிக்கடி மாற்ற வேண்டி இருக்கும் என்றும் அதற்கு அதிகமாகச் செலவாகும் என்றும் குழந்தை ஊனமாகப் பிறக்க அதிக வாய்ப்பிருப்பதாகவும் அவளைப் பரிசோதித்த மருத்துவர்கள் சொன்ன செய்தியால் குழந்தையின் வரவை ஆவலுடன் எதிர்பார்த்த தம்பதியினர் கலங்கிப் போனார்கள்.

எதிர்பார்ப்புகள் கலைந்த போது நிம்மதி தொலைந்தது, தூக்கம் தொலைந்தது, தினம் தினம் குழந்தையின் நிலையை எண்ணி கலங்கிய படியே நாட்கள் கடந்தன. மனதாலும் உடலாலும் இருவருமே உடைந்து விட்டார்கள். நிவேதா அடிக்கடி உலகத்தையே மறந்த சிந்தனையில் ஆழ்ந்து விடுவாள். என்ன நினைத்தாளோ யாரும் எதிர்பார்க்காத முடிவை அவள் எடுத்தாள்.

ஒரு நாள் நவீனிடம் நிவேதா தன் முடிவைத் தெரிவித்தாள். ஆரம்பத்தில் நவீன் ஏற்றுக்கொள்ளத் தயங்கினாலும் அவள் சொன்ன காரணங்களிலும் நியாயம் இருப்பதாகவே அவனுக்குப் பட்டது. “நாம் இருவரும் வேலைக்குப் போகிறவர்கள் உடலாலும் நோயாலும் அவதியுறும் குழந்தையை எவரது உதவியும் இல்லாமல் நல்ல முறையில் பார்த்துக் கொள்ள நம்மால் இயலுமா? வாழ்நாளும் முழுவதும் ஏற்படும் மருத்துவச் செலவை எம்மால் சமாளிக்க முடியுமா? குழந்தை பிறந்த பின் பணம் இல்லாமல் சரியான மருத்துவ வசதிகளைக் கொடுக்க முடியாமல் போய் நோயினாலும் உடல் ஊனத்தாலும் வாழ்நாள் முழுவதும் துன்பப்பட்டுக் கொண்டிருக்கும் என் குழந்தையைத் தினம் தினம் பார்த்துக் கொண்டிருக்கும் தைரியம் என் மனதுக்கு இல்லையப்பா. எப்படித்தான் என் தாயுள்ளம் என் குழந்தையின் வேதனையைப் பார்த்துக் கொண்டிருக்கும். அந்த வேதனையை விட நான் எடுத்திருக்கும் இந்த முடிவால் வரும் வேதனை பரவாயில்லை. குழந்தைக்கும் நிம்மதி..." - என அவள் கண்ணீர் விட்டழுத போது அவளது நியாயத்தையும் பரிதவிப்பையும் நவீனால் புரிந்து கொள்ள முடிந்தது.

'ஆனாலும் கருக்கலைப்பென்பது சட்டவிரோதமானதே?' சந்தேகத்துடன் கேட்டான் நவீன்


'சட்டப்படி செய்வோமே...?' பதில் சொன்னாள் நிவேதா

'என்ன சொல்கிறாய் நிவேதா...?'

'நீதிமன்றத்தின் அனுமதி பெற்றுச் செய்வோம் என்கிறேன்.'

'நீதிமன்றம் அனுமதிக்கும் என நம்புகிறாயா?'

இது ஜனநாயக நாடு. இது நான் சுமக்கும் குழந்தை. என் உடல் எனக்கு சொந்தம், என்கின்ற போது குழந்தையைப் பற்றி முடிவெடுக்க எனக்கே அதிக உரிமையுண்டு என்றாள்.



அவளது கருத்தை ஏற்றுக் கொண்ட நவீன் ஒரு லோயரைப் (சட்டத்தரணியை) பார்த்துப் பேசுவதற்கு முடிவெடுத்தான். கருக்கலைப்புக்காக நீதிமன்ற அனுமதி கேட்டு நீதிமன்றத்திற்குச் சென்ற இருவரும் அது தமக்கு இவ்வளவு பெரிய சிக்கல்களையும் மன அழுத்தத்தையும் கொண்டு வருமென கொஞ்சமும் நினைத்திருக்க வில்லை. முதற்தடவையாக இப்படிப்பட்ட வழக்கை நீதிமன்றம் எதிர்கொண்டிருந்தமையும் ஊடகங்களின் பார்வை இவர்கள் மீது பட்டுவிட்டமையும் உலக மக்களின் பார்வைக்கு இவர்களைக் கொண்டு வந்து நிறுத்திவிட்டிருந்தது.

இதனை வைத்து ஊடகங்களில் வாதப் பிரதி வாதங்களும் நடந்து கொண்டிருந்தன. பரபரப்புக்காக இதனையே நிகழ்ச்சியாகத் தயாரித்து ஊடகங்களும் வெளியிட்டுக் கொண்டிருந்தன. எங்கு திரும்பினாலும் இதே பேச்சுத் தான். அநேகர் இவர்களைத் திட்டித் தீர்த்தார்கள். அரிதாக சிலர் ஆதரவாக பேசினார்கள்.

இப்படியான ஒரு நிலையினை நவீனும் நிவேதாவும் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. பேசாமல் சட்டத்திற்கு மாறாக கருக்கலைப்பு செய்திருந்தாள் யாருக்கும் தெரிந்திருக்காது. இந்த அவஸ்தைகளும் ஏற்பட்டிருக்காது என நினைத்துக் கொண்டாள் நிவேதா.

இதனையே அவள் வீட்டிற்கு வந்து வேலை செய்து விட்டு போகும் புஸ்பாவும் சொன்னாள்.

'என்னங்கம்மா...அது உங்க பிள்ளை அதைக் கலைக்கிறதுக்கு உங்களுக்கு உரிமை இருக்கு. அதுக்கு ஏன் கோட்டு கேசு எல்லாம் போயிட்டிருக்கீங்க. பேசாம நீங்க எங்கிட்ட விசயத்தை சொல்லியிருந்தா அபோர்ஷன் பண்ணிறத்துக்கு நானே நல்ல டாக்குத்தரை பிடிச்சுத் தந்திருப்பேனே... காதும் காதும் வைச்ச மாதிரி விஷயம் முடிஞ்சிருக்கும். இப்ப என்னாச்சு பாத்திங்களா. என்ட ஆறாவது புள்ளை வையித்தில உண்டான நேரம் அந்த டாக்குத்தர் தானம்மா அபோர்ஷன் செய்தார்.

'அப்படிச் செய்யிறது சட்டவிரோதமானது. அதனால் தான் சட்டத்தை நாடினோம்'. நிவேதா நிதானமாகச் சொன்னாள்.

'பொல்லாத சட்டம். தன்ட குழந்தையை பெத்துக்கிறதுக்கும் அழிக்கிறதுக்கும் பெண்ணுக்கு உரிமை இருக்கெண்டு சட்டம் கொண்டு வரணும் அம்மா' அவள் பேச்சைக் கேட்டு விரத்தியுடன் சிரித்த நிவேதா. 'அப்படி சட்டம் வந்திட்டா பெண்களே இல்லாத உலகம் தான் உருவாகும்' என்றாள் அந்த சிரிப்பினூடே. 'என்னம்மா சொல்லுறீங்க...' புரியாது விழித்தால் புஸ்பா.

'இப்பவெல்லாம் வயித்தில இருக்கிறது பெண் குழந்தை என்டு தெரிஞ்சதுமே சட்டவிரோதமா கருவைக் கலைச்சிடுறாங்க. இதில வேற நீ சொல்லுற சட்டத்தை கொண்டு வந்தா இந்த உலகத்தில பெண் ஜென்மமே இருக்காது.

அப்படியான சட்டம் சில வன்முறைகளால் ஏற்படும் வேண்டாத கர்ப்பத்தைக் கலைக்க உதவலாம். ஆனா, அப்படி ஒரு சட்டம் இருக்குமேயானால் அதனைத் தவறான வழியில் பயன்படுத்துவதை தவிர்க்க ஏதாவது வழி இருக்க வேணும். அப்பதான் அந்தச் சட்டம் அபாயமற்றதாகவும், பெண்களை பாதுகாப்பதாகவும் இருக்க வேண்டும். அப்பொழுதான் எதிர்பார்த்த பலனை கொடுக்கும்.

'போங்கம்மா நான் படிக்காதவ. எனக்கு இந்த சட்டம் பற்றி எல்லாம் எதுவும் தெரியாது' என்று சொல்லிக் கொண்டு அவள் தன் வேலையில் மூழ்கிவிட்டாள். ஆனாலும், அவளது பேச்சு நிவேதாவுக்கு பல ஆண்டுகளுக்கு முன் நடைபெற்ற அமெரிக்கத் தேர்தலை ஞாபகப்படுத்திச் சென்றது...ஆம்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் கருக்கலைப்பு அரசியலை நிர்ணயிக்கும் காரணியாக அமைந்திருந்தது. ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளராக நியமிக்கப்பட்ட புஷ்ஷின் தலைமையைக் கொண்ட ரிப்பப்ளிக்கன் கட்சி 'உயிர் ஆண்டவனின் சொத்தென்றும் கருவில் இருக்கும் உயிரை அழிப்பதற்கு எவருக்கும் உரிமை இல்லை'(மருத்துவ காரணங்கள் இருந்தாலொழிய) என்று சொல்ல முற்போக்குச் சிந்தனையாளர்கள் அதிகமாகக் கொண்ட ஜனநாயகக் கட்சி வெகுண்டெழுந்தது 'பெண்ணின் உடல் அவளுக்கே சொந்தமென்றும் அதில் உருவாகும் கருவை தக்க வைக்கவோ அழிக்கவோ அவளுக்கு உரிமை உண்டு' என்றும் கோஷமிட்டமையும் புஷ்பாவின் பேச்சினால் நிவேதாவின் நினைவுக்கு வந்து போனது. அமெரிக்காவில் கருக்கலைப்பு விடயம் அந்நாட்டில் அதிபர் தெரிவைத் தீர்மானிக்கக் கூடிய தீவிரம் பெற்றிருந்தது. ஆனால், இங்கு அப்படி இல்லையே. கருக்கலைப்பும், சிசுக்கொலையும் சர்வ சாதாரணமாக நடப்பது தெரிந்தும் யாரும் கவலைப்படுவதாகவோ தீவிரப் பிரச்சினையாக அதனை எடுத்துக் கொள்வதாகவோ இல்லையே. எதிலும் அரசியல் இருப்பதை கவனிக்காமல் இருக்கிறார்கள் என்று மனதிலுள் அலுத்துக் கொண்டாள் நிவேதா.

விசாரணை விசாரணை என்று மாறி மாறி நீதிமன்றத்திற்கும் மருத்துவமனைக்கும் அலைந்ததில் நவீனும் நிவேதாவும் களைத்தே போய்விட்டார்கள்.

விசாரணைகளின் போது நீதிமன்றம் நியமித்த மருத்துவக் குழு சமர்பித்த அறிக்கையில் 'குழந்தைக்கு இதய பாதிப்பு இருப்பது உண்மையாகிலும் உடல் கோளாறுகள் இருப்பதை உறுதிப்படுத்த முடியவில்லை என்றும் இதயபாதிப்பை குழந்தை பிறந்த பின்னர் சரி செய்து விடக்கூடிய தொழில் நுட்ப மருத்துவ வசதிகள் இருப்பதாகவும் தெரிவித்த மருத்துவக் குழு பிரவசத்தின் போது நிகழும் தாயின் மரணங்களைக் குறைக்கவும் பாதுகாப்பான கருக்லைப்புகள் நடக்கவும் வழி செய்யும் பொருட்டே இந்தியாவில் கருக்கலைப்புச் சட்டப்படி அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. எனினும், 20 வாரங்களுக்குள் இருக்கும் கருவையே கலைக்க முடியும் என்ற வரம்பும் இருக்கிறது. 25 வாரங்களான கருவைக் கலைப்பது தாய்க்கு ஆபத்தானது என்கிறது சட்டம். இதனை ஒரிருவருக்காக மீறுவது ஆபத்தான முன்னுதாரணம் என்றும் தெரிவித்தது.

சில வேளைகளில் கரு வளர வளர குழந்தை ஆரோக்கியம் அடையலாம். 25 வாரக் கருவைக் கலைப்பது ஒரு உயிர்க் கொலையே. அது தாயின் உயிருக்கும் ஆபத்தானது. மறுபடியும் கரப்பம் தரிக்க முடியாத நிலை ஏற்படும்.

தவிர கருவில் இருக்கும் குழந்தை வழமை போல் இருக்கிறதா என்று குழந்தை பூரணமாக வளர்ந்த பிறகே அதாவது 20 வாரங்கள் கழித்தே அறிவது சாத்தியம். ஆனால் அதன் பிறகு (20 வாரங்களுக்குப் பிறகு) சட்டப்படி கருக்கலைப்புக்கு அனுமதி இல்லை என்பதால் குழந்தைக்கு பாதிப்பு என்று தெரிந்தாலும் கருக்கலைப்பு என்பது சாத்தியமில்லை என்று பல விடயங்களை முன்வைத்திருந்தது. அந்த மருத்துவ குழு.

'நீதிமன்றம் நடைமுறையில் உள்ள சட்டத்தை விளக்கி அதற்குரிய பொருள் காணுமே தவிர புதிய சட்டத்தை இயற்ற முடியாது. உயிர் தோன்றிய பிறகு அதைக் கொலை செய்ய வேண்டுமென எப்படிக் கேட்பீர்கள். கருணைக் கொலையில் இருந்து இது எந்த வகையில் வேறுபட்டது. நிவேதா குழந்தையைப் பெற்றுக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை' என்று நீதிமன்றம் தீர்ப்பளித்த போது நிவேதா அழுதேவிட்டாள்.

அதனை ஊடகங்கள் படம் பிடித்து பத்திரிகை தொலைக்காட்சி என்று வெளியிட்டு அவர்களின் மனதை மேலும் மேலும் நோகடித்துக் கொண்டிருந்தன. கருவைச் சுமப்பவள் அதனை அழிக்க இத்தனை முனைப்புக் காட்டுவதை என சர்சைகள் எழுந்தன. சட்டவிரோதமாக எத்தனை கருக்கலைப்புகள் நடக்கின்றன. அவைகளைப பற்றிப் பேசுவோர் யாருமில்லை. நாம் சரியான காரணத்தோடு சட்டத்தை நாடியது தவறா? உலகமே சேர்ந்து எம்மைத் திட்டுகிறதே. ஏன ஆதங்கப்பட்டு நின்றார்கள் நவீனும் நிவேதாவும்.

ஆனாலும், இந்தத் தீர்ப்புக்குப் பின்னர் பல தொண்டு நிறுவனங்கள் தொடர்பு கொண்டு குழந்தையின் மருத்துவ செலவுக்கு பண உதவி தருவதாக சொன்னன. குழந்தையை தாங்களே வளர்க்கவும் அவை முன் வந்தன. சிலர் குழந்தைக்கு எந்த ஆபத்தும் வராது என ஆறுதல் படுத்தினர். இந்த நம்பிக்கைகளிலும் ஆறுதல்களிலும் மனதைத் தேற்றியபடி வாழத்தலைப்பட்டனர் நவீனும் நிவேதாவும். இவர்கள் பற்றி ஊடகங்களில் வெளிவந்த விமர்சனங்கள், காட்சிகள் மனதை உறுத்தினாலும் நாளடைவில் அவையும் குறைய மன அழுத்தமும் குறைய ஆரம்பித்திருந்தது.

கட்டிலில் படுத்திருந்த நிவேதா எப்படித் தூங்கினாளோ தெரியவில்லை. எழும்பிய போது மாலை ஏழு மணியைத் தாண்டியிருந்தது. நவீன் அலுவலகத்தில் இருந்து வந்து டீ குடித்த படி டிவியில் பார்வையைப் பதித்திருந்தான்.

“என்னங்க என்ன எழும்பியிருக்கலாமே... ரீ போட்டுத் தந்திருப்பேன்”.

'இல்ல, நீ அசந்து தூங்கிக் கொண்டிருந்தாய் ஏன் எழுப்புவான் என்று தான்... ஏன் உடம்புக்கு முடியவில்லையா...?'

'இதுவரைக்கும் எதுவுமில்லை. ஆனால், இப்ப சாடையாக நாரிப்பக்கம் வலிக்குமாப் போல் இருக்கிறது. சரியாகிவிடும்' என்று சொல்லி விட்டு கைகால் முகம் கழுவச் சென்றுவிட்டாள் நிவேதா. நள்ளிரவு வேளை தாங்க முடியாத வலியால் நிவேதா துடித்துக் கொண்டிருந்தாள். அவளை ஆஸ்பத்திரிக்கு அயல் வீட்டாரின் துணையுடன் கூட்டிச் சென்றான் நவீன்.

ஆஸ்பத்திரியை அடைந்த போது அவள் மயக்கமடைந்து விட்டாள். கண்விழித்த நிவேதா வைத்தியரிடம் காரணம் கேட்ட போது வைத்தியர் சொன்ன விடயத்தைக் கேட்டு அதிர்ந்தே போனாள்.

குழந்தை வேண்டுமென்று விரும்பினாள் நிவேதா. ஆனால், ஆரோக்கியமான குழந்தை இல்லை யென்றால் வேண்டாம் என்றாள். காலம் கடந்து விட்டது என்றது நீதிமன்றம். குழந்தை பிறக்கட்டும் மருத்துவம் அற்புதங்களை நிகழ்த்தும் என வைத்தியர்கள் தெரிவித்தார்கள். ஆனால், குழந்தையோ எந்த அற்புதத்திற்கும் தான் தயாராக இல்லை என்று அனைவரையும் ஏமாற்றிவிட்டுச் சென்றுவிட்டது.

**தன் வயிற்றில் வளர்ந்த சிசு தொடர்ப்பில் நிவேதா ஒரு தீர்ப்பை நாடினாள். நீதிமன்றமோ வேறு ஒரு தீர்பை வழங்கியது. ஆனால், வயிற்றில் உள்ள சிசுவோ யாருடைய தீர்ப்புக்களையும் கவனத்தில் கொள்ளாது. யாரும் எதிர்பார்க்காத ஒரு தீர்ப்பை தானே வழங்கிவிட்டிருந்தது.**



சிற்றரும்பே சிந்திப்பாய்...!
சாய்ந்த பின்னும் சருகாகிப்போகும்
சவுக்கு மரமா நீ...?
சாய்ந்த பின்னும் மணம் கொடுக்கும்
சந்தன மரமல்லவா நீ...!




## கொழுந்து சஞ்சிகையின் ஏற்பாட்டில்

## அமரத்துவமடைந்த திருமதி ராஜேஸ்வரி கிருஷ்ணசாமி ஞாபகார்த்த பெண் எழுத்தாளர்களுக்கான சிறுகதைப் போட்டியில் பங்குபற்றியவர்கள்.

1. மாறும் மனங்களும் மறக்க முடியாத நினைவுகளும்
   ஜீவரதி - அம்பாறை
2. பாடுபட்டால் பட்டத்தில் இருக்கலாம்
   பவித்ரா - அம்பாறை
3. ஏன் பிறந்தாய் பெண்ணே
   ஆர்.பிலோமினா - வத்தளை
4. அர்த்தமுள்ள புன்னகை
   எஸ்.ஜெகதீஸ்வரி - கொழும்பு -06
5. கொழுந்து
   டென்சிகா உதய கண்ணன் - தெல்லிப்பளை
6. வைதேகியின் வைராக்கியம்
   வசந்தகுமாரி சண்முகம் - தலவாக்கலை
7. கோவில்
   திருமதி.ப.தேவி - யாழ்ப்பாணம்
8. பஞ்சுக்கனா பற... பற...
   மீராவதி ராஜீவன் - கல்லாறு
9. பணத்தாசை - மானம் - அவமானம்
   ஜி.இஸட். அம்ஜுடீன்
10. அணைந்தது பாசவிளக்கு
    ஜெயரூபின் இராமநாதன் - யாழ்ப்பாணம்
11. மதியை கெடுத்த மது
    கி.லக்ஷிகா - யாழ்ப்பாணம்
12. வரப்பிரசாதம்
    வீ.எம்.எலிசபெத் - அட்டன்
13. வீரமங்கை
    கமாஜினி நாகராசா - சுழிபுரம்
14. அன்பிற்கும் உண்டோ...
    மைத்ரேயி - ஆனைக்கோட்டை
15. தாலி மணி
16. கொழுந்து
    லோஹிதா இராமமூர்த்தி - கலஹா
17. தலைவிதி
    எம்.என்.ரிஸ்னியா - மாவினல்லை
18. குப்பை வண்டி
    செல்வி ஆஷிகா - கொழும்பு 12
19. வாழ நினைத்தால் வாழலாம்
    என்.கே.வேணி - பலாங்கொடை
20. உழைக்க மட்டுமே பிறந்தவர்கள்
    எஸ்.தர்ஷிகா - பதுளை
21. விதவைக்கு கிடைத்த வாழ்க்கை
    ஏ.சி.ஜரினா முஸதபா - கடுவலை
22. மக்களின் வாழ்வு
    சஜீதாமகேந்திராநாதன் - திருக்கோணமலை
23. பங்குனிப்பச்சை
    எஸ்.வசந்தமலர் - நமுனுகுல
24. குற்றம் என்ன நாம் செய்தோம்?
    யோகா.யோகேந்திரன் - திருக்கோணமலை
25. சந்தேகம்
    தஸ்வின் பாலசுப்பிரமணியம் - கொழும்பு 06
26. தீயில் விழுந்த தாமரை
    ஆ.சிவதர்ஷனி - ஹல்கரனோயா
27. உறவுகளின் சங்கமம்
    ஜெயந்தினி யோகராஜா - வவுனியா
28. தீர்ப்பு
    கார்த்திகாயினி சபேஸ் - கொழும்பு 15
29. சாதனைப் பதிவேட்டில்
    வி.சுபானி - மட்டக்களப்பு
30. ஒரு தாயின் கனவு
    சந்திரகாந்தா முருகானந்தன் - கொழும்பு 06
31. இன்னும் சுவடுகளாய்...
    சாம்பவி லோஜினி இராஜரட்ணம் - தம்புலுவில் 02
32. பாதை மாறும் பயணம்
    ம.மதினா - வாழைச்சேனை
33. அதிபர் ஆரோக்கியம்
    அக்னஸ் - சவரிமுத்து தலவாக்கலை
34. சிரச்சேதம்
    உதயலதா நவநீதன் - சங்கானை
35. எதற்கும் ஒரு காலம் உண்டு
    சம்மாந்துறை மஷூறா - சம்மாந்துறை
36. கல்லறையில் காத்திருப்பு
    எஸ்.கலாமணி - மண்டைத்தீவு
37. விரக்தியின் விளிம்பில்
    எஸ்.எம்.ஹிஸ்வான்
38. சொத்து
    அனுராதா பாக்கியராஜா - களுவாஞ்சிக்குடி
39. விதி
    எச்.எப்.ரிஸ்னா - கல்கிஸை
40. விடியலை தேடிய தாய்மை
    யே.மேரி ரெனோசின் - யாழ்ப்பாணம்
41. நெருஞ்சிமுள்
    ஆரபி நவதீபன் - சங்கானை
42. ஓட, ஓட, ஓட முடியல
    பாரதி கென்னடி - மட்டக்களப்பு
43. காகித மலர்
    லோசனா மனோகரன் - ஹட்டன்
44. எழுதப்படாத பக்கங்கள்
    எம்.ஜே.பாத்திமா சுமையா - கல்முனை
45. இறந்துவிட்ட இதயம்
    விநோதினி முத்துலிங்கம் - முல்லைத்தீவு
46. அவளுக்கென்று ஒரு மனம்
    மதிரவிசந்திரா - சண்டிலிப்பாய்
47. மான் பொறி
    ஜி.இஸட் அம்ஜடீன் - பன்லை
48. நம்பிக்கை ஒளி
    சோ.லோகேஸ்வரி - கோப்பாய்
49. முகமூடிகள்
    அரச நிதர்சனா - மொறட்டுவ
50. தலை நிமிரும் தலைமுறை
    ஏ.யு.எல்.செல்வி உம்மா - கண்டி
51. உணர்வுகளின் ஊர்வலத்தில்
    ஹஜேந்திரன் மைக்கல் - மட்டக்களப்பு
52. பேதையகம்
    ஜெ.இந்துஜா - மட்டக்களப்பு
53. மனிதாபிமானம்
    க.ஜெயந்தினி - அட்டன்
54. விடியலை நோக்கி
    ரா.சிவரஞ்சனி - மடுல்சீமை
55. அவளின் தியாகம்
    மஸீதா அன்சார் - மொறட்டுவ
56. பெண் என்று
    மைதிலி - வவுனியா
57. தடம் மாறும் வாழ்க்கை கோலங்கள்
    லதா செல்வராஜ் - பதுளை
58. சுமை
    சுலைமாசமி இக்பால் - மாவனல்லை
59. புதிய பாதை
    கிருபாரெத்தினம் அஸ்வினி - மட்டக்களப்பு
60. சாதிக்கும் கொழுந்துகள்
    அஜ்மல் அன்வர் - கல்பிட்டி
61. பெண் வாழ்வியல்
    ஜெ.இந்திரா - மண்டூர்
62. பொட்டு வைத்த கற்கள்
    பர்கான் பீ.இப்திகார் - வெல்லம்பிட்டிய
63. வெளியூர் போன காற்று
    சுகுனா - தலவாக்கலை
64. இவளுக்கு என்ன பெயர்?
    ராதிகா - யாழ்ப்பாணம்
65. ஏ.ஆர்.எப்.பஸ்லானா - உக்குவலை

# பேராசிரியராக மேன்மை பெற்ற கல்விமான் தை. தனராஜ்



இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் கல்வி பீட சிரேஷ்ட விரிவுரையாளர். தை. தனராஜ் அப் பல்லைகக்கழக பேரவையினால் பேராசிரியராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார். இப்பதவி உயர்வு கடந்த பெப்ரவரி மாதம் முதல் வழங்கப்பட்டுள்ளது.

மலையகத்தைச் சேர்ந்த பேரோசியர் தனராஜ், மிடில்ட்ரன் தோட்டப் படாசாலை, தலவாக்கலை சம்பத்திரிசியார் கல்லூாரி, ஹட்டன் ஹைலன்ஸ் கல்லூரி ஆசியவற்றின் பழைய மாணவராவார். ஒரு மாணவ ஆசிரியராகத் தனது ஆசிரியப் பணியை ஆரம்பித்த பேராசிரியர் தமிழிலும், ஆங்கிலத்திலும் பயிற்றப்பட்ட ஆசிரியத் தராதரப் பத்திரத்தைக் கொண்டிருப்பதுடன் பேராதனை பல்கலைக்கழகத்தில் வெளிவாரியாக தனது இளங்கலைமாணி பட்டத்தையும் பெற்றுக் கொண்டுள்ளார்.

அத்துடன் கொழும்பு பல்கலைக்கழகம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம் மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் ஆகியவற்றில் தனது முதுமாணி பட்டங்களையும் புதுடில்லி கல்வித் திட்டமிடல் மற்றும் முகாமைத்துவ நிறுவனத்தில் கல்வி முகாமைத்துவ டிப்ளோமாவையும் பேராசிரியர் பெற்றுக் கொண்டுள்ளார்.

கோல்புறூக் தமிழ் வித்தியாலயம், ஹட்டன் புனித டோன் பொஸ்கோ கல்லூரி, கொழும்பு இந்துக் கல்லூரி ஆகியவற்றில் ஆசிரியராகவும், கலஹா தமிழ் வித்தியாலயத்தில் அதிபராகவம் கடமையாற்றியுள்ளார். தவிர பேராசிரியர் மாலைதீவு, ஓமான் ஆகிய நாடுகளிலும் ஆசிரியராகப் பணியாற்றியுள்ளதுடன் கல்வி அமைச்சிலும் பல்வேறு பதவி நிலைகளில் பணியாற்றியுள்ளார். தேசிய கல்வி நிறவகத்தின் தமிழ்த் துறையின் பணிப்பாளராக கடமையாற்றிய பேராசிரியர் திறந்த பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளராக பதவியேற்கும் முன்னர் ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியீட்டகம் செய்த தொலைக்கல்வி நவீன மயமாக்கல் செயற்றிட்டத்தில் நிபுணத்துவ ஆலோசகராகவும் பணி புரிந்தார்.

பல கல்விசார் நூல்களையும் கட்டுரைகளையும் எழுதியுள்ள பேராசிரியரின் ஆய்வுக் கட்டுரைகள் உள்நாட்டு, வெளிநாட்டு ஆய்வு சஞ்சிகைகளில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. அத்துடன் அவர் பல உள்நாட்டு, வெளிநாட்டு சஞ்சிகைகள் மற்றும் ஆய்வு சஞ்சிகைகளின் ஆசிரியர் குழுவிலும் பணியாற்றி வருகின்றார்.

இந்தியா, அவுஸ்திரேலியா, மலேசியா, தாய்லாந்து, கொரியா, ஜப்பான், இங்கிலாந்து, நேபாளம், பிலிப்பைன்ஸ் முதலிய நாடுகளில் நடைபெற்ற கல்வி சார் கருத்தரங்குகளிலும் சர்வதேச மாநாடுகளிலும் பங்குபற்றியுள்ள பேராசிரியர் தனராஜ் தற்போது பல கல்வி நிறுவனங்களில் வளவாளராகவும், ஆலோசகராகவும், பயிற்றுனராகவும் பணியாற்றி வருகிறார்.


பூபாலசிங்கம் புத்தகசாலை

புத்தக விற்பனையாளர்கள், ஏற்றுமதி, இறக்குமதியாளர்கள், நூல் வெளியீட்டாளர்கள்...

தலைமை : இல. 340, 202, செட்டியார் தெரு, கொழும்பு 11.
தொலைபேசி : 2422321, தொலைநகல் : 2337313 மின்னஞ்சல் : pbdho@sltnet.lk

கிளை : இல. 309-2/3, காலி வீதி,
கொழும்பு 06.
தொலைபேசி : 4 515775, 2504266

இல. 4, ஆஸ்பத்திரி வீதி,
பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.

## கொழுந்து சிறுகதை போட்டியில் இரண்டாம் பரிசு பெற்ற கதை



# பஞ்சக்கனா ரா...ரா...!

மீராவதி ராஜ்சன்

திண்ணையில், நைந்துபோன கரடிப்பொம்மையுடன் விளையாடிக்கொண்டிருந்த தம்பிப்பாப்பா தனது அக்காளை ஏக்கத்துடன் பார்த்தான். கண்கள் மின்னியது. மூக்கு வழிந்து காய்ந்து போயிருத்தது. "பசிக்குதடி... செல்லத்துக்கு?" அன்பின் தழுவலுடன் கேட்டாள் அக்காள்.

"அம்மா வந்தவுடன, எல்லாரும் சேர்ந்து சாப்பிடலாமென்ன?" அக்காள் சொன்னது தம்பிக்கு விளங்கியிருக்குமோ தெரியவில்லை. ஆனால் தம்பிப்பாப்பா முகத்தில் ஏதோ வெளிப்பட்டது.

நடுப்பகலுக்குக் கொஞ்சம் முன்னைய பகல்நேரம். வீட்டிற்கு வெளியே வெய்யில் தகித்துகொண்டிருந்தாலும், உள்ளே குளிர்ச்சி, களியால் மெழுகி, ஓலை வேய்ந்த வீட்டிற்கு, சுற்றியிருந்த மரங்கள் தந்த குழுமை. நேரம் பதினொன்றிற்கு மேலிருக்கும். காலை ஏழு மணிக்கெல்லாம் புறப்பட்டுச் சென்றிருந்த அம்மா இன்னும் வீடு திரும்பவில்லை. வந்துசேர எப்படியும் பிற்பகல் ஒரு மணியாகும் சில வேறைகளில் அதையும் தாண்டலாம். தம்பிப்பாப்பா அதுவரைக்கும் பசி தாங்கமாட்டான். அடுப்பில் மூடிசைத்திருந்த பாத்திரத்தில், சுட்டரிய பால் மீதமிருந்தது. அம்ம வரும்வரை இதைவிட்டால் வேறு எதுவுமில்லை. சமாளித்தாக வேய்டும். மூக்குவைத்த சிறிய டம்ளரில் பாலை ஊற்றியெடுத்துக்கொணடு திண்ணைக்கு வந்தாள் சுவனியா. தம்பிப்பாப்பா தம் கைகளிர ண்டையும் தரையில் அடித்து, தனது சந்தோசமிகுதியை வெளிப்படுத்தினான்.


அம்மா வெளியே செல்கின்ற இது போன்ற நாட்களிலெல்லாம் இப்படித்தான். சுவனியாவால் பாடசாலைக்கு செல்லமுடியாது. அம்மா வீடு வந்து சேரும்வரை. அவள்தான் வீட்டையும், தம்பிப் பாப்பாவையும் பார்த்துக்கொள்ள வேண்டும். பாடசாலை செல்லாமல் வீட்டில் நின்றாலும், சுவனியாவின் நினைவுகளெல்லாம் பாடசாலையில் என்ன நடைபெறும்? என்று சுற்றிவரும். "இப்ப இண்டர்வல் முடிந்திருக்கும். கௌரி டீச்சரின் ஆங்கிலப் பாடத்தை ஆரம்பித்திருப்பா. நேற்று வாசித்துக்காட்டிய கதையின் மிகுதியை, இன்று சொல்லிக் கொடுப்பா." நினைத்துப்பார்க்கும்போது சுவனியாவின் மனதில் கவலை ஏறியது. "க்கா...ப்பா..."எனற தம்பிப்பாப்பாவின் முனகல் அவளை நிஜத்திற்கு இழுத்தது. ஒரு வயதேயாகி விட்டிருந்த அந்தக் குழந்தையை அணைத்து, பாலூ ட்டத்தொடங்கினாள் பதின்மூன்றே வயது நிரம்பிய அந்த செவிலித்தாய்.

கிழக்கு மாகாணத்தின், மட்டக்களப்பு மாவட்டத்தில், அயல் மாவட்ட எல்லையோடு அமைந்திருந்த கொளணிக் கிராமங்களில் ஒன்றில்தான் சுவனியாவின் அன்றாடங்காய்ச்சி குடும்பம் வாழ்ந்து வந்தது.

அடிப்படை வசதிகள் எதுவும் கிடைத்துவிடாத, தேவையேற்படின் தூரம் சென்று பெற்றுக்கொள்ள வேண்டிய நிலையிலிருக்கும் கிராமம். கிரமமான போக்குவரத்து வசதிகள் இல்லாதது, அடிப்படைத் தேவைகளை பெற்றுக் கொள்வதை பகீரதப் பிரயத்தனமாக்கியது. பிரதான தெருவால் காலையில் செல்லும் பஸ்வண்டியை பிடிப்பதற்கே ஒரு கிலோமீற்றர் தூரம் நடந்தாகவேண்டும். அந்த வண்டியை தவறவிட்டால், அடுத்தவண்டியை பிற்பகலில்தான் காணலாம். அதுவும் அதிஸ்டமிருந்தால்தான் உண்டு துவிச்சக்கர வண்டி, மோட்டார்சைக்கில் வண்டி வைத்திருந்தால் சிரமம் குறைவு. மற்றவர்கள் தத்தியோ அல்லது தொத்தியோதான் அடுத்த கிராமத்திற்கோ, நகருக்கோ செல்லவேண்டும்.

கூலித்தொழிலை விட்டால் வேறு எதுவுமே தெரியாத, உழைத்துப் பெறுவதை குடும்பத்திற்காக அல்லாமல், குடிபோதைக்குச் செலவளிக்கத் தெரிந்த அப்பா. வீட்டு வேலைகள் வெளிவேலைகளென்று எங்கோவெல்லாம் சென்று, எதையோ எல்லாம் செய்து குடும்பத்தை கவனித்துக்கொண்டிருக்கும் அம்மா. அந்தக் கிராமத்தில் இவர்களுடன் சேர்த்து, எண்பது வீதமானவர்களின் வாழ்வில் கல்வியறிவென்பது தேவையற்ற ஒரு விடயமாகவே இருந்திருக்கிறது. தாமும் பாடசாலை சென்றறியாமல், தங்கள் பிள்ளைகள் பாடசாலை செல்லவேண்டியதன் முக்கியத்துவத்தையும் அறியாது கிராமத்தில் வாழ்பவர்கள். கிராமத்துப் பிள்ளைகள் பாடசாலை செல்வதானால், சுமார் ஐந்து கிலோமீற்றர் தொலைவிலுள்ள அடுத்த கிராமத்திலுள்ள பாடசாலைக்குத்தான் செல்லவேண்டியிருக்கும்.

அடுத்த கிராமத்துப் பாடசாலையில்தான் சுவனியாவும் எட்டாம் வகுப்பில் கல்வி கற்கின்றாள். குடும்பத்தில் மூத்த பெண். பாடசாலையிலும் கெட்டிக்காரிதான். காலையில் எழுந்து, தாயோடு வீட்டு வேலைகளை இயன்றவரை செய்து முடித்தபின்., பாடசாலைக்கு ஓடிச்செல்வாள். செல்லும் வழியில் யாரேனும் தெரிந்தவர்கள் சைக்கிளிலோ, வண்டியிலோ வந்தால் அன்று சுவனியாவின் பாடு



கொண்டாட்டந்தான். அன்றைக்கு பாடசாலையில் அவள் முதலாம் பாடவேளையை இழக்கவேண்டியிராது.

வருட ஆரம்பத்தில் அந்தக் கிராமத்திலிருந்து. அவளது வயதை ஒத்த பதினைந்து மாணவ மாணவிகள் பாடசாலைக்கு வந்து போய்க்கொண்டிருந்தனர். திருவிழாப்போல் எல்லாரும் கூட்டங்கூட்டமாய் சென்றுவந்தனர். காலப்போக்கில் ஒரு கட்டெறும்பாய்த் தேய்ந்துபோனது. இப்பொழுது சுவனியாவோடு சேர்த்து நான்கு பேர்தான் பாடசாலை செல்கிறார்கள். அவர்களும் ஒழுங்கில்லை. கல்வியின் முக்கியத்-துவத்தின் அறிவின்மையால் கற்பதிலிருக்கும் ஈடுபாட்டை அவரகள் இழந்துபோனதும். குடும்பச் சூழ்நிலை காரணமாக சிறுவர் தொழிலாளிகளாக மாறிவிட்டதும்தான் அவர்கள் இடைவிலகியதற்கு காரணமாயிருக்கும். அதில் ராணியை, அவளுடைய தாய்மாமாவிற்கு கட்டிக்கொடுதுவிட்டதாக கதை அடிபட்டது.

பெட்டைப்பிள்ளைக்கு படிப்பு எதற்கென்று கேள்வி கேட்கவும், பாரத்துக்கொண்டிராமல், நேரத்துடன் கட்டிக்கொடுத்தால் கவலையில்லை என்றும் சொல்ல, சுவனியாவின் பெற்றோர் உட்பட அந்தக் கிராமத்தில் ஆயிரம்பேர் இருக்கிறார்கள். யார் என்ன சொன்னாலும், கல்வியில் சுவனியாவிற்கு இயல்பாகவே ஈடுபாடிருந்தது. தன்னால் முடிந்தவரை பாடசாலைக்கு சென்றேயாக வேண்டுமென்பது அவளின் மன ஆதங்கம். தானும் இடைவிலகியவர்களில் ஒருத்தியாக ஆகிவிடக் கூடாதென்று, மூட்டுச்சந்திப் பிள்ளையாருக்கும் ஓடைக்கரை பத்தினியம்மனுக்கும் நேர்த்தி வைத்திருக் கிறாள் அந்தச் சிறுமி.

பாடசாலை முடிந்து வீடு வந்தால், தம்பிப்பாப்பாவை அவளிடம் கொடுத்துவிட்டு அம்மா வெளியே சென்றுவிடுவாள். இனி அவள் வரும்வரை சுவனியாவிற்கு வேறு எந்த வேலையும் இல்லை, வீட்டுப்பாடங்களை கவனிப்பது உட்பட அதனால்தான் பாடசாலையிலிருந்து வீட்டிற்குவரும் வழியிலேயே.

மூட்டுச்சந்தி ஆலமரத்தடியில், அன்றைய நாள் வீட்டுப் பாடங்களையெல்லாம் செய்து முடித்து விட்டுத்தான் வீடுவந்து சேர்வது, அவளின் வழக்கம். காலையில் சாப்பிட்ட தண்ணீர்ச்சோறும், வாழைப்பழமும் ஜீரணமாகி மணிக்கணக்காக இருக்கவேண்டும். பசி வயிற்றைக் கிள்ளியது. வயிறு "புர்ர்.....புர்ர..." என்று சத்தம் போட்டது. அம்மா வீடு வந்தபிறகுதான் மதியச் சாப்பாட்டைப்பற்றி சிந்திக்கவே முடியும். அம்மா வந்துசேரும் நேரத்துக்கு. அது மதியச்சாப்பாடாக இருக்காது. இரவுச்சாப்பாடுதான். அதுவும் அம்மா வரும் நிலையைப் பொறுத்தது. உணவு விசயத்தில் எப்பொழுதும் நினைப்பது நடப்பதில்லை. கடவுளின் கையில்தான். மண்குடத்தில் மொண்டுவைத்திருந்த தண்ணீரில் ஒரு டம்ளர் குடித்து, வயிற்றை ஜில்லித்துக்கொண்டாள் சுவனியா. இதுவும் பழகிப்போன ஒன்றுதான்.

சுவனியா தனது வாழ்வில் என்றுமே மூன்று வேளைச்சாப்பாட்டை கண்டதேயில்லை. இரண்டு வேளை பெறுவதே பெரும்பாடு. ஒடக்கரை பத்தினியம்மன் சடங்கு தொடங்கிவிட்டால் கொண்டாட்டந்தான். கோவிலில் போய்க் காத்துக்கிடந்தால், அளவுக்கதிகமாக சாப்பாடு கிடைக்கும். சாதாரணமாக, பசிக்கும் ஒரு நாளில் கைகொடுப்பது பின் முற்றத்து மாமரத்துக் காயும், ஜில்லென்ற பானைத்தண்ணீருந்தான். தண்ணீரென்ற வுடன்தான், "இன்று தண்ணீர் எடுக்கப் போக வேண்டுமென்று சுவனியாவிற்கு ஞாபகம் வந்தது. கிராமத்தில் குடிநீர் வசதியில்லை. அதைப் பெற்றுக்கொள்ள சுமார் இரண்டு கிலோமீற்றர் தூரம் நடந்தாக வேண்டும். மழைகாலம் தவிர பெரும்பாலான காலங்களில் கோவில் கிணறு வற்றியே இருப்பதனால், பண்டியாற்றிற்கு செல்லவேண்டியிருக்கும்.

"பண்டியாறு, பண்டியாறு..." திருப்பித் திருப்பி சொல்லிப்பார்த்தாள் சுவனியா. சொல்லும் பொழுதிலில்லாம் அவளையறியாமல் சிரிப்பு வந்தது. யாருக்கோ திட்டுவதுபோல அந்த ஆற்றின் பெயர். பண்டியாற்றின் நீர் எப்பொழுதும் பன்றி குளித்ததுபோல் சேற்று நீராய்க் கலங்கியிருப்பதால்தான் அப்படி அழைக்கப்படுகிறதென்று. சுவனியாவின் வரலாற்றுப்பாட ஆசிரியர் சொன்னது அவளுக்கு ஞாபகமிருந்தாலும், வருகின்ற சிரிப்பபை அடக்கவா முடியும்? கலங்கியிருக்கும் பண்டியாற்றிலிருந்து, தண்ணீரை தெளிவித்து குடத்திலெடுப்பதென்பது அந்தப்பிரதேச மக்களுக்கே உரிய கைவண்மை. அந்தத் திறமையை குடி நீருக்கு அடுத்ததாக அந்தக் கிராமத்து மக்களுக்கு கனவாக இருப்பது மின்சாரம். மின்சார விளக்குகளை காண்பதென்பது சுவனியா போன்ற சின்னஞ் சிறுசுகளுக்கு பெரும் புதினந்தான்.

"நீ வளர்ந்து பெரியவனாகி, கல்யாணங்கட்டி, உனக்கொரு பாப்பா பிறந்து அவன் வளர்ந்து வருகின்ற நேரத்தில் நம்ம கிராமத்துக்கு மின்சாரம் வந்திரும் கவலைப்படாதே." என்று, தம்பிப்பாப்பா வெக்கையில், புழுக்கத்தில் தவித்து அழும்போது அம்மா அவனிடம் சொல்வதுண்டு.

பால்குடித்து முடித்து தம்பிபாப்பா, திண்ணையில் நொந்து நூலாகிப்போயிருந்த பன்பாயில் அசந்து தூங்கிப்போயிருந்தான். மெதுவாக எழுந்து பின்புறம் வந்தாள் சுவனியா, மாமரத்தில் காய்த்துத் தொங்கிக்கொண்டிருந்த மாங்காய்களில் ஒன்றை எட்டிப்பறித்தாள், உடைந்த காம்பை, வழிந்த பாலுடன் அருகிலிருந்த கல்லில் தேய்தது அகற்றிவிட்டு. அதே கல்லின் விளிம்பில் மாங்காயைக் குற்றி சிலும்பப் பிளந்தெடுத்தாள். உடைந்த செங்காய் தன் நிறத்தை வெளிக்காட்ட, நாவில் நீரூறியது. எத்தனை தரம் சாப்பிட்டாலும் முதல்தரமாய் சாப்பிடுவதுபோல் நாவில் நீரூறும். சிறிதாய் ஒரு துண்டைப் பிய்த்து வாயில் போட புளிப்புக் கலந்த சுவை சப்புக்கொட்ட வைத்தது.

வீட்டைச் சுற்றிவர, கண்ணுக்குத் தெரிந்ததெல்லாம் பச்சைப்பசேலென்ற இயற்கை. தோட்டந்தோட்டமாய் மரங்களும், வயல்வெளிகளும், தூரத்து மலைக் குன்றுகளுமாய் காட்சி. மனிதர்களை காண்பதென்பது முடியாதது. கிராமத்தில் இரண்டு வீடுகளுக்கிடையில் தூரமுண்டு பிரதான சாலைக்கு செல்வதானால் அவள் வீட்டிலிருந்து வயற்காட்டினூடு சிறிது தூரம் ஒற்றையடிப் பாதையில் செல்ல வேண்டும். அமைதியைக் கலைப்பது பறவைகளின் சத்தமும், தூரத்தில் கேட்ட ஒலிபெருக்கியின் அலறலுந்தான். யாரோ சொற்பொழிவாற்றுகிறார்கள். "ஒரு தொண்டு நிறுவனம் பெண்களுக்கு சுகவாழ்வு நிகழ்ச்சி நடத்துகிறார்களாம். அங்குதான் ஒலிபெருக்கி போட்டிருக்கு விழாவிற்கு பிரதேச செயலாளர் வருகிறாரா'மென்று பாடசாலையில் நேற்று யாரோ கதைத்தது சுவனியாவிற்கு ஞாபகம் வந்தது. அவர்தான் பேசுகிறார்போல. அவர் பேசியது காற்றில் கலந்து வந்தது. சுவனியாவிற்கு தெளிவாக கேட்டது.

“நம்மட பிரதேசத்திலுள்ள சில கிராமங்களைத்தவிர, அனேகமான மற்றக் கிராமங்களுக்குத் தேவையான வசதிகள் ஒன்றுமேயில்லை. வசதிகள் நம்மை வந்து சேரவில்லை என்பதற்காக, நாமெல்லாம் வாழாமலிருக்க முடியுமா? நமது தேவைகளை எதிர்பார்த்து ஏங்கிக்கொண்டிருப்பதை விட்டு விட்டு, நாமெல்லாம் நமது காலிலே நிற்கப் பழகிக்கொள்ள வேண்டியது அவசியம்.” இப்பமட்டும் நாம் என்ன இரவல் கால்களிலா நிற்கிறோமென்று, அவரைப் பார்த்து கேட்க வேண்டும் போல சுவனியாவிற்கு இருந்தது. காதுகளை இன்னும் கூர்மையாக்கிக் கொண்டாள்.

“நாம் ஒவ்வொருவரும் உணர்ந்து முயற்சி யெடுப்போமானால், எங்களைவிட வசதியானவர்கள் எவரும் இருக்க முடியாது. நம்மிடம் உள்ளதுபோல இயற்கை வளமும் வாழ்வும் யாரிடமிருக்கிறது? ஒவ்வொரு குடும்பமும் தமக்குத் தேவையானதை தாமே உற்பத்திசெய்து கொள்ள முடியும். வீட்டுக்கொரு தோட்டம், பயன்தரும் மரங்கள், நமது நாளாந்த வாழ்விற்கு உதவும்.”

சுவனியாவின் வயிற்றில் அமிலக்கிள்ளல். “ஏன் அம்மா இன்னும் வீடு வந்து சேரவில்லை? வாற வழியில் அவளும் இந்த விழாவிற்கு போயிருப்பாளோ? கெதியில் வாம்மா, பசிக்குது.” பசியை மறப்பதற்காக, மீண்டும் பிரதேச செயலாளரின் பேச்சில் கவனத்தைச் செலுத்தினாள்.

“நாம் சீரழிந்து போகிறோம், கல்வியிலிருந்து இடைவிலகுகிறோம், நமது பெண் பிள்ளைகளுக்கு பால்யவிவாகம் செய்துவைக்கிறோம், சட்டத்துக்குப் புறம்பாக கசிப்பு வடிக்கிறோம், குடிக்கிறோம். நாம் செய்யும் செயல்களால்தான் நாம் அழிந்து போகிறோம். குடும்பத்தலைவர்கள் மட்டுமல்ல குடும்பத்தலைவிகளும் சிந்தித்து செயற்படாததால் தான் குடும்பங்கள் சிதைந்து சின்னாபின்னமாகிப் போகின்றது. எமது வளங்களை புரிந்துகொண்டு எதிர்கால இளைஞர் சமுதாயம் நமது பிரதேசத்தை கட்டியெழுப்புவதற்கான முன்னெடுப்புகளை மேற்கொள்ளவேண்டும்.”

அவர் சொல்வதெல்லாம் உண்மையாகவே சுவனியாவின் மனதிற்குப் பட்டது. பிரதேச செயலாளர் சொன்ன ஒவ்வொரு சொற்களும் அவள் மனதில் பசுமரத்தாணிபோல் பதிந்துபோனது. மனதில் பல கேள்விகள். “எமது குடும்பமும் சிதைந்துதானா போயிருக்கிறது?”

சிந்தித்துப் பார்த்தாள் சுவனியா. அப்பாவின் நடவடிக்கைகளை நினைத்துப்பார்க்கவே அவளுக்கு பயமாகவிருந்தது. அந்த நாசத்தை குடிக்காமலிருந்தால் அப்பா நல்லவர்தான். குடித்துவிட்டு வரும் அப்பாவிடம் அம்மாவும், அவளும் நாள்தோறும் வாங்கும் அடிகள்..., ஒவ்வொரு நாளும் அம்மாவுக்கும், அப்பாவுக்கு மிடையில் நடந்தேறும் தவறாத சண்டைகள்..., காதுகொடுத்தே கேட்கமுடியாத வார்த்தை பிரயோகங்கள்... சுவனியாவால் இதை மாற்ற என்னதான் செய்யமுடியும்?

அப்பாவுடன் சண்டை போட்டு, அவரிடம் அடிவாங்கி அழுதுகொண்டிருக்கும் பொழுதுகளிலெல்லாம் அம்மாவிற்கு இருக்கும் ஒரே ஆறுதல் சுவனியா மட்டுமே. அந்த நேரத்தில் மூக்கைச் சிந்திச்சிந்தி அழுதபடி அவளது அம்மா சொல்வதொன்றும் சுவனியாவிற்கு புரிவதேயில்லை. அம்மாவைப் பொறுத்தவரையில் அவளது நடவடிக்கள் எதுவுமே சுவனியாவிற்கு புரிவதில்லை. தன் பிள்ளைகளை வளர்ப்பதற்காக எதை வேண்டுமானாலும் செய்யலாம் அல்லது எதைச் செய்தாவது தன் குடும்பத்தை கொண்டு நடத்தலாம் என்ற செயற்பாடு அவளிடம் இருப்பதாக சுவனியாவிற்கு பட்டது.

சுவனியாவின் பதின்மூன்று வருட வாழ்வில் அவள் கண்ட, அனுபவித்த எதையும் அவளால் தாங்கிக் கொள்ள முடியுமென்றே தோன்றியது. பிரதேச செயலாளர் சொன்னதுபோல், அவளது எதிர்காலம் தொடர்பாக அவளிற்கு அசைக்க முடியாத ஆர்வமும் கனவும் இருந்தது. இருந்தாலும், ஒரு வேளை உணவோடு சமாளிக்கவேண்டிய நிலை. சில நாட்களில் ஏற்படும் பசியையும், அந்த நேரத்தில் ஏற்படும் வலியையும் அவளால் தாங்கமுடிவதில்லை. கூரான கத்தியால் வயிற்றில் குத்திக்குடைவது போலிருக்கும். அடுத்ததாக, தனது பாடசாலைக் கல்வியை தொடரமுடியாமல் போய்விடக்கூடிய ஒரு சூழ்நிலை அவளது வாழ்வில் ஏற்படுவதை அவளால் நினைத்துப்பார்க்கவே கடினமாக இருந்தது. அப்படி ஒரு வேளை நடக்குமானால் அவளால் உயிரோடு இருக்கமுடியுமோ தெரியவில்லை. தூரத்தில், பிரதான சாலையிலிருந்து பிரிந்து, வயற்காடுகளினூடு வீட்டிற்கு வரும் ஒற்றையடி மண் பாதையில் யாரோ வருவது தெரிந்தது. அம்மாவாக இருக்குமோ? கண்ணைக் குறுக்கிப் பார்த்தாள். அது அம்மா இல்லையென்பது

ஆடி அசைந்து வந்த அந்த ஆணுருவம் நிட்சயமாக அப்பா இல்லை. அவர் இந்த நேரத்தில் வீட்டிற்கு வரமாட்டார். யாரோ வருகிறார்கள். காலையில் எழுந்ததிலிருந்து யாரையும் காணாதிருந்த அந்த பதின்மூன்று வயது சிறுமி, வீட்டிற்கு வருபவர் ஏதேனும் உண்ணும் பொருள் கொண்டுவரக்கூடிய சாத்தியக்கூற்றை எதிர்பார்த்து, வருபவரை எதிர்கொண்டு வரவேற்கத் தயாரனாள்.

பின்கதை

மீந்துபோன போன போதையிலிருந்த அந்த மனித மிருகம், திமிறித்திணறிய அந்தச் சின்னப் பெண்ணை, தன் பிடிக்குள் ஆக்கிரமித்து, பரவி, திமிரத்துப்போய்த் திணித்தபோது. அவளால் கத்தியலறக்கூட முடியவில்லை. உதவி தேடி, உடலின் எந்தப்பாகத்தையும் அசைக்கவே முடியாத நிலையில், நடந்தேறுவது என்னவென்பதை அறிந்தகொள்ள முடியாமல் கிடந்தாள். மேலே உச்சி வானில் சூரியன் கண்ணைக்கூசிப் பிரகாசித்தது. தூரத்துப் பறவைகளின் குரலும், ஒலிபெருக்கியின் அலறலும், யாரோவின் இரைந்த மூச்சும் காதினுள் பாய்ந்தது. அந்தப் பதின்மூன்று வயது மங்கையின்மேல், அவள் எதிர்பார்க்காத நேரத்தில், எதிர்பார்க்காத வடிவத்தில் அவளது எதிர்காலம் பாரமாய் இறங்கியது.



தமிழ் செய்த குற்றம்
தமிழ்
தமிழ் நாட்டின்
தாய்மொழியானது!

- கவிஞர் ஈரோடு தமிழன்பன்.

## மலையக இலக்கிய விடிவெள்ளி




கண்டி இந்தியத் துணைத் தூதுவராலய அனுசரணையுடன் கண்டித் தமிழ்ச் சங்கம் நடாத்திய தமிழ் இலக்கிய பெருவிழாவின் போது, மலையக இலக்கிய வளர்ச்சிக்காக அர்ப்பணிப்புடன் அரும்பணியாற்றிய கொழுந்து ஆசிரியருடன் நாடகக் கலைஞருமான "மலையக இலக்கிய விடிவெள்ளி" என விருதுவழங்கி கௌரவிக்கிறார். திரு. ஞானம் ஆசிரியர் தி. ஞானசேகரன் உடன் உள்ளார்.

## சேவல்


பணக்காரர் பலருக்கு
பகல்நேர உணவு...
ஏழைகள் பலருக்கு
காலைநேரக் கடிகாரம்...

## நீ பூவல்ல...!

பூவென்று உன்னை
பாவெழுத மாட்டேன்
எல்லாப் பூக்களுமே
எண்ணிலா தேனீக்களுக்கு
இடம் கொடுக்கிறது.
எனக்கு மட்டுமே இதயத்தில்
இடம் தந்தாய் நீ.
எப்படி உன்னை
இளம்பூ என்பேன்.

-யோ.புரட்சி

# சான்றோர் விருது பெறும் சாதனையாளர் மோகன்ராஜ்



மலையகக் கல்வி அபிவிருத்தி மன்றத்தின் பணிப்பாளராக இருந்து பெரும் பங்களிப்பு செய்து வரும், செல்லத்துரை மோகன்ராஜ் எட்டியாந்தோட்டை சென். மேரிஸ் கல்லூரியில் தனது கல்வியைப் பூர்த்தி செய்து கொண்டு தொழிற்துறையில் ஈடுபடலானார்.

வர்த்தகத்துறையின் வசந்தத்தை அனுபவிப்பதை விட கவிதையும் நாடகமும் தொலைக்காட்சியுமே அவரை வசியப்படுத்தியது. காலஞ்சென்ற ஸ்ரீதர் பிச்சையப்பாவோடு இணைந்து கவியரங்குகள் பலவற்றில் தடம் பதித்ததோடு சித்தாரா இசைக்குழுவின் மேடை நிகழ்ச்சிகளிலும் அறிவிப்பாளராக பங்கேற்று தன் திறமைகளை வெளிக்காட்டியுள்ளார்.

மேடை நாடகங்களிலும், தன் ஆற்றல்களை நிரூபித்துள்ள மோகன்ராஜ், காலஞ்சென்ற ஆர். மணிமேகலை இயக்கிய சித்தப்பா என்ற நாடகம் அரச நாடகவிழாவில் இடம்பெற்ற போது, அதில் பிரதான பாத்திரத்தில் நடித்து பலரது பாராட்டையும் பெற்றார். அதேபோல், அந்தனி ஜீவா நெறிப்படுத்திய உலகப் புகழ் நாடக ஆசிரியர், பேர்ட்டோல்ட் பிறெக்டின் தாய் நாடகத்தில் தொழிலாளர்வர்க்கத் தலைவனாக நடித்து தனது சிறப்பான நடிப்பால், விமர்சகர்களின் பார்வையில் பதிவானார்.

தமிழ்க் கலைஞர்களிலேயே அதிகமான சிங்கள தொலைக்காட்சி நாடகங்களில் நடித்தவரும், சிங்கள மொழி மூலமான நாடகங்களை மொழி பெயர்த்தவரும், மோகன்ராஜ் என்றால், அது மிகையன்று.

2013ஆம் ஆண்டு தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் இளைஞர் குரு நாடகவிழாவை, இளைஞர் விவகாரம் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சர் டளஸ் அழகப்பெருமவுடன் கலைஞர் மோகன்ராஜ் பிரதம அதிதியாக கலந்து கொண்டு விழாவை துவக்கி வைத்தார். இவ்வாண்டில் சுவர்ணவாஹினி பணிப் பாளர் எஸ்.ஏ. அழகேசன் நெறிப்படுத்திய "அவன் போட்ட கணக்கு" என்ற நாடகத்தில் நடித்ததன் மூலம் அகில இலங்கை ரீதியாக சிறந்த நடிகருக்கான விருதை பெற்றார். இத்தகைய ஆற்றல்மிக்க சான்றோன் விருது வழங்கி கௌரவிப்பது பொருத்தமானதே. கொழுந்து சஞ்சிகை அவரை வாழத்தி மகிழ்கின்றது.




## மதுரை மாநகரில் நூல் அறிமுகம்

அந்தனிஜீவா எழுதிய தலை நகரில் தமிழ் நாடக அரங்கு எனும் நூலின் அறிமுக விழா 29.09.2013 அன்று மதுரை மணியம்மை மகளிர் மழலையர் பள்ளியில், பேராசிரியர் தி.சு. நடாராசன் தலைமையில் நடைபெற்றபோது, பேராசிரியர் போத்திரெட்டி நூலாசிரியர் ஆகியோர் உரையாற்றுவதை யும் கவிஞர் இரா. இரவி, தி.சு. நடராசன், புரவலர் ஆகியோர்அமர்ந்திருப்பதையும் காணலாம்.

## கொழுந்து சிறுகதை போட்டியில் மூன்றாம் பரிசு பெற்ற கதை


# குப்பை வண்டி

ஆஷிகா

“ஊத்த... ஊத்த... குனு... குனு...?” என்று கத்தியவாறு அந்த தோட்டத்துக்குள் நுழைந்தாள் லகஷ்மி. காலை எட்டு மணி என்பதால் வீடுகளில் எல்லோரும் வேலைகளில் மூழ்கியிருந்தனர். ஒவ்வொரு வீட்டுக்கு முன்னாலும் நின்று அவர்கள் கொடுத்த குப்பைகளை கையிலிருந்த யூரியா பையில் சேமித்தாள் லகஷ்மி.

“தாத்தா.... ஊத்த தாங்க.... ஊத்த இல்லியா.....?”

என வாயினுள் சத்தமாக முணுமுணுத்தவாறு குப்பைகள் அடங்கிய பொலித்தீன் பையை லகஷ்மியிடம் கொடுத்தார்.



குப்பைகளுடன் ஏச்சுக்களையும் சேர்த்து பெற்றுக்கொண்ட லக்ஷ்மி, பாதையின் ஓரத்தில் நிறுத்தியிருந்த குப்பை வண்டியில் குப்பைகளை காட்டி, வெற்று யூரியா பையுடன் அடுத்தத் தோட்டத்துக்குள் நுழைந்தாள். ஒவ்வொரு தோட்டத்துக்குள்ளும் நுழைந்து குப்பை வண்டியில் குப்பைகளை கொட்டி, வெற்று யூரியா பையுடன் அடுத்தத் தோட்டத்துக்குள் நுழைந்தாள்.

ஒவ்வொரு தோட்டத்துக்குள்ளும் நுழைந்து குப்பைகளை சேகரித்த லஷ்மியுடன் பிரேமா அக்காவும் சேர்ந்து கொண்டாள். இருவரும் பாதையில் கிடந்தக் குப்பைக் கூளங்களை கூட்டிப் பெருக்கி குப்பை வண்டியினுள் சேகரித்தனர். கொழும்பின் குடியிருப்புப் பகுதி என்றாலும் வாகனங்களுக்குக் குறைவில்லை. வாகன நெரிசலுடன் மனித நடமாட்டத்துக்கும் நடுவே குப்பைகளை சேகரித்துக் கொண்டு இருவரும் வண்டியைத் தள்ளியவாறு வழமையாகவும், அந்தப் பாதையின் இறுதியாகவும் உள்ள பெரிய வீட்டு வாசல் படிக்கு அருகில் வண்டியை நிறுத்தினர்.

“நான இப்படி இருக்கிறது! நீ போய் குனு எடுத்து வா...” என பிரேமா அக்கா கொச்சைத் தமிழில் லகஷ்மியிடம் கூறிவிட்டு பக்கவாட்டுப் படியில் அமர்ந்தாள்.

பிரேமா சகோதர மொழி கதைக்கும் இனத்தைச் சேர்ந்தவள் என்றாலும் கூட தன்னுடன் வேலைப் பார்க்கும் மற்ற இனத்தவர்களுடன் மிகவும் அன்பாகவே நடந்துக் கொள்வாள். லகஷ்மியை தனது சொந்த சகோதரி போன்றே பாசம் காட்டினாள் பிரேமா.

வெற்று யூரியா பையுடன் உள்ளே கசன்ற லக்ஷ்மி, “தாத்தா... ஊத்தத் தாரிங்களா...” எனக் கேட்டவாறு உள் வாசல் அருகில் சென்று நின்றாள். உள்ளே இருந்து வெளியே வந்த ஒரு மூதாட்டி குப்பைகளை கொடுத்துவிட்டு.

“பழைய கறி இருக்கு... தரவாமா...?” என லக்ஷ்மியைப் பார்த்து பரிவுடன் கேட்டார். “ஆ... தாங்கமா..... நாங்க பாண் வாங்கி திங்கிறோம்.....”

என்று உண்மையான மகிழ்வுடன கூறினார் லக்ஷ்மி. குப்பை அடங்கிய பையுடனும் பழைய கறியுடனும் வெளிவந்த லக்ஷ்மி, “பிரேமா அக்கா..... அந்த தாத்தா கறி தந்தாங்க.... பாண் வாங்கிட்டு வந்தா திங்கலாம்.....”

என்று பிரேமா அக்காவைப் பார்த்துக் கூறினாள். அப்பொழுது அங்கே வழமையாக அவர்களுடன் வரும் ஜாபிர் நானாவும் வந்து அமர்ந்திருந்தார்.

"மே... ஜாபிர்... நானா..ஓயா பாங் அரங் எனவத? (ஜாபிர் நானா.... நீங்க பாண் வாங்கிட்டு வாரீங்களா?)"

என பிரேமா அக்கா கேட்டாள். சரியென தலையாட்டிவிட்டு ஜாபிர் நானா பாண் வாங்கி வரச் சென்றார். பிறகு மூவரும் அந்தப் படியில் அமர்ந்தே காலை உணவை உண்டனர். சாப்பிட்டு முடித்த ஜாபிர் நானா பொதுவாக கதைத்து விட்டு,

"சரி...நான் போறேன்.... அந்த பக்கம் பிளெட்ஸ்'ல ஊத்த எடுக்க இருக்கு....."

என்று கூறிவிட்டு சாலையின் எதிர்புறம் நிறுத்தி வைத்திருந்த தனது குப்பை வண்டியை நோக்கிச் சென்றார்.

அவர் செல்வதைப் பார்த்துவிட்டுத் திரும்பிய பிரேமா அக்கா, "லக்ஷ்மி, வெத்தில இரிக்கிறதா?" எனக் கேட்டாள். தன் மடியில் இருந்த வெற்றிலை சுருளை எடுத்து பிரேமா அக்காவிடம் நீட்டினாள் லக்ஷ்மி. வெற்றிலையைப் போட்டுக் கொண்டே பிரேமா அக்கா,

"லக்ஷ்மி, உனகிட்ட ஒண்ணு கேக்கணும்... ஏன் இந்தத் துண்டு போட்டிரிக்கறது" ....என லக்ஷ்மியின் மார்பில் கிடந்த தாவணியைக் காட்டிக் கேட்டாள்.

அதைக் கேட்ட லக்ஷ்மியின் முகம் சட்டென மாறியது. கவலையா? வெறுப்பா? அருவருப்பா? என அறிய முடியாத வகையில் பல உணர்ச்சிகளின் கலவையாகத் தோற்றமளித்த முகத்துடன்...

"இல்ல பிரேமா அக்கா.... நான் தேவன்னுதான் இந்த முந்தானிய போட்டேன்." என வெறுப்புடன் கூறத் தொடங்கினாள்.

லக்ஷ்மி "நா வயத்துப் பொழப்புக்கு இந்த வேலைக்கு வந்தேன். ஆனா.. ரோட்ல ஊத்தய கூட்டிட்டு இரிந்தா அந்த மூதேவிங்க கண்ணெடுக்காம பாக்குற பார்வ இரிக்கே..ச்சீ...செத்துறலாம் போல இரிக்கி...." என ஆவேசத்துடனும் கோபத்துடனும் கூறத் தொடங்கிய லக்ஷ்மி அழுகையுடன் நிறுத்தினாள். சிறிதுநேரத்தில் தன்னை ஆசுவாசப்படுத்தக் கொண்ட லக்ஷ்மி, தனது பேச்சைத் தொடர்ந்தாள்.



"என்னக்கா பண்றது... நம்ம தலையெழுத்து - நசீபு" என அலுத்துக் கொண்டாள்.

வெற்றிலையை குதப்பிக் கொண்டிருந்த பிரேமா அக்கா, படிக்கு கீழே கழிவுநீர் ஓடிய கால்வாயில் வெற்றிலைச் சாற்றைத் துப்பி விட்டு லக்ஷ்மியின் பக்கம் திரும்பி,

"எவெங் ஒன்ன அப்படி பாத்தது...? யாராச்சும் ஒனக்கு எதும் சொன்னதா..? சொன்னது சொன்னா... வா என்கூட வந்து காட்டு.... தூத்தேறி...."

என மேலும் சில கூடாத வார்த்தைகளால் திட்டத் தொடங்கினாள்.

பிரேமா அக்கா கொழும்பைச் சேர்ந்தவள்தான். கொழும்பின் சேரிப் பகுதியில் பிறந்து வளர்ந்தவள் என்பதாலும், பேரின சமூகத்தைச் சேர்ந்தவள் என்பதாலும் இயல்பிலேயே அவளுள் ஆண்பிள்ளைத் தனமும், சண்டித்தனமும் அதிகமாக ஊறியிருந்தது. பயம் என்பது என்ன எனக் கேட்கும் அளவு தைரியம் கொண்டவள். வழியில் குப்பை சேமித்து செல்லும் போதோ, அல்லது சக ஊழியர்களுடன் ஏதும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டலோ இலகுவில் விட்டுவிட மாட்டாள். அவர்களாக பின்வாங்கி செல்லும் வரை வாயாலேயே பேசி மிரட்டுவாள்.

"அதுதான் அக்கா... எனக்கும் கோபம்... அதுக்குன்னு பொம்பளைங்க இருக்காளுங்களே... ஏன் என்ன பாக்கணும்...? ஒவ்வொருத்தனுங்க சாடையா வேற கதைக்கிறானுங்க.. ஆனா எல்லாரும் அப்புடி இல்ல... சில தறுதலைங்கதான் அந்தமாதிரி

எனக் கூறி முடித்து போத்தலில் இருந்த தண்ணீரைக் குடித்தாள் லக்ஷ்மி.

அவர்கள் அமர்ந்திருந்த வாசலுக்கு முன்னால் உள்ள பாதையில் வாகனங்கள் சென்ற வண்ணம் இருந்தன. அப்பொழுது அவர்களைக் கடந்து சென்ற ஒரு வேனில் இருந்து உணவு உண்டு முடித்த பொட்டலத்தை பாதையில் வீசி எறிந்தார் உள்ளே இருந்த ஒரு பெரிய மனிதர். இதைக் கண்ட பிரேமா அக்கா,

“ஹோய்... குனு எங்க போடுறது...? வானத்துல போனா பெரிய ஆமுவா....? குப்பைய கூடையில போடுவோய்...” என சிங்களத்தில் அந்த வாகனம் கண் மறையும்வரை திட்டித் தீர்த்தாள். பின் லக்ஷ்மியின் பக்கம் திரும்பி,

“பாத்தியா... நாங்க ரோட்ட மெனக்கெட்டு கூட்டுறது இவனுங்க போற பெரியதனத்துல ரோட்டுல குனு போடுறது....” என்று கோபமாக கூறினாள். அதைக் கேட்ட லக்ஷ்மி, “அதுதானே.... வெள்ளனைக்கே வந்த தூசின்னும் பாக்காம அசிங்கம்னும் பாக்காம கூட்டுறோம். இவனுங்க ஒடம்பு நோவாம ஊத்தய போடுறானுவோ.....” எனத் தன் பங்குக்கு பொரிந்துத் கொட்டினாள்.

சிறிது நேரம் மௌனத்தில் கழிந்தது. அது காலை பதினொரு மணி என்பதால் முன் பள்ளி சென்ற ஒரு சில குழந்தைகள் பெற்றோர்களுடன் அவ்வழியே வந்து, அவர்களைக் கடந்த சென்றனர். அதைக் கண்ட லக்ஷ்மியின் கண்கள் கலங்கின. “ம்ஹூம்....” எனப் பெருமூச்சு விட்டவளாக “எனக்கும் சின்னவள பாக்கனும் போல இரிக்கி....” என மொட்டையாகக் கூறி நிறுத்தினாள்.

அதை வாங்கிக் கொண்ட பிரேமா அக்கா, “நானும் கேக்க நெனச்சது... ஓண்ட புள்ளைங்கள பாக்க நீ போகலையா லக்ஷ்மி?” என வினவினாள். மீண்டும் ஒரு பெருமூச்சு விட்ட லக்ஷ்மி, “பாக்க போகனும் அக்கா... எங்க? லீவு கெடக்கனுமே... சின்னவள நெனச்சாதான் தாங்க முடியல. பெரியவ இரிப்பா. அவக்கு வௌங்குது.. எட்டு வயசுங்கிறதால. சின்னதுக்கு ரெண்டு வயசுதான் நடக்குது....” எனக் கண்ணில் வழிந்த கண்ணீரைத் துடைத்தவாறு கவலையுடன் கூறினாள்.

மீண்டும் தூரத்தில் சென்ற குழந்தைகளை பார்த்த லக்ஷ்மி” பிரேமாவின் பக்கம் திரும்பி,




“புள்ளைங்க வயிறு நெறையனும்னுதான் இந்த வேலைக்கே வந்தேன். அதுகளாவது படிச்சு நல்லா வரணும் அக்கா. எம்ம உம்மா கஷ்டப்பட்டாங்க. அவங்களும் படிக்கல. எங்களையும் படிக்க வைக்க முடியல. நா(ன்)படிச்சிருந்தா இந்த வேலைக்கே வந்திருக்க மாட்டேன். வயித்துப் பாட்டுக்கு எதுனாச்சும் தேடனும்னுதான் புள்ளைங்கள உட்டுட்டு, ஊர உட்டுட்டு, மழை வெயில்னு பாக்காம யாரும் எவரும் செய்யாத இந்த வேலைய செய்றேன்...”

என மூச்சு விடாமல் கூறி நிறுத்தினாள் லக்ஷ்மி. சிறிது நேர அமைதிக்குப் பின்,

“யாரக்கா இந்த வேலைக்கு வருவாங்க...? ஒரு ஆளு அவிஞ்ச பழத்தையோ... இல்ல வெங்காயத்தயோ கையில பிடிப்பாங்களா...? அருவருப்பா பாக்குறாங்க... இந்த மனுசங்க. ஆனா நாங்க பல நாள் அவுஞ்சதுகள கூட அள்ளுறோம். ரோட்ல கெடக்குற அசிங்கத்தையும் அள்ளி கூட்டுறோம். ஆனா எங்கள யாரும் மதிக்கிறதேயில்ல.... களவாடாம .... ஏமாத்தாம.... நேர்மையா, கண்ணியமா பொழைக்கனும்னுதானே இந்த வேலைய செய்றோம்.. என்ன அக்கா சொல்றீங்க.....?

ஏன் பிரேமா அக்காவை நோக்கி கேள்வியுடன் நிறுத்தினாள் லக்ஷ்மி. அதை ஆமோதித்தவளாக மேலும் கீழும் தலையசைத்த பிரேமா அக்கா,

“நீ சொல்றது சரிதான் லக்ஷ்மி... நாங்களும் படிச்சிருந்தா இந்த வேலைக்கு வர்ரதா? ஆனாலும் இந்த படிச்சதுகள் என்ன மனுசங்களாவா நடக்குறதிங்...?எனக் கூறுகின்றாள். அதற்கு லக்ஷ்மி “சரியா சொன்னீங்க அக்கா... நாங்க அவங்க வீட்டுல் கெடக்குற குப்பையத்தானே எடுக்க போறோம்... கடனா கேட்டு போறோம்...? இல்ல இருக்குற புதுசு எல்லாம் தாங்கன்னா கேக்கிறோம் குப்பைகளோட வீசுற, கழிக்கிற பழைய துணிகள தாங்கன்னு....



ஆஷிகா

கேட்டா அவுங்களுக்கு எவ்வளவு கோவம் வருது தெரியுமா? இந்தா இரிக்கி.... இந்த வீட்டுல உள்ள அந்த உம்மாவ பாருங்க ... அவுங்க எவ்வளவோ நல்லவங்க...' என்று அவர்கள் அமர்ந்திருந்த அந்த வீட்டை நோக்கிக் கையை நீட்டிக் காட்டினாள்.

லக்ஷ்மி தொடர்ந்தும், "ஒரு நாள் அவங்களாவே பழைய துணி இருக்கு.... நல்லதுதாம்மா... கிழிஞ்சதெல்லாம் இல்ல... வேணும்னா நீங்க உடுங்க...' என்டு சொல்லிட்டு ஒடனே கொண்டு வந்து தந்தாங்க அக்கா... அதுமட்டுமில்ல.... எனக்கு எத்தன புள்ளைங்க...? என்ன செய்துங்க...? என்டெல்லாம் கேட்டுட்டு சின்னவக்கும் உடுப்புகள் தந்தாங்க... இப்ப கூட பாத்திங்கதானே... எங்களுக்கு தின்னுறதுக்கும் கறி தந்தாங்க தானே...." எனக் கூறினாள்.

அதற்கு வாயைத் திறக்காமலேயே, "ம்...ம்..." எனத் தலையாட்டிய பிரேமா அக்காவைத் தொடர்ந்து, "அவங்க என்டைக்கும் நல்லா இரிக்கணும்... நாங்களும் மனுசங்க... எங்களுக்கும் மானம் இரிக்கி, பசி இரிக்கினு நெனக்கிறாங்க. மத்தவங்க என்னன்னா ஊத்தய கேட்டாக்கூட கடுகடுக்குறாங்க. அவங்க தரலன்னு நாங்க வந்துட்டாலும் பின்னாடியே வந்து ஊத்திய தந்துட்டு அதுக்கும் திட்டுறாங்க... ச்சே என்ன வாழ்க்க இதுன்னு வெறுப்பாவும் இரிக்கி என மனம் வருந்திய நிலையில் நிறுத்தினாள் லக்ஷ்மி.

அப்பொழுது பாதையோரத்தில் கூவிக்கொண்டு பழ அச்சாறு வண்டியொன்றைத் தள்ளிக் கொண்டு ஒருவர் வந்தார். அவர் அருகில் வர அவரை நிறுத்திய பிரேமா அக்கா "ஐயே! (அண்ணா) மாங்கா அச்சாறு பத்து ரூவாக்கு தாரதா" எனக் கேட்டுப் பணத்தைக் கொடுத்துப் பெற்றுக் கொண்டாள். பின்னர் லக்ஷ்மியின் பக்கம் திரும்பி அவளுக்கும் நீட்டி தானும் ஒருத் துண்டைக் கடித்தவாறு புளிப்பின் பிரதிபலிப்பாய் முகத்தைச் சுளித்துக் கொண்டு, "நாங்க பொம்பளைங்க ஏன் தெருவுக்கு வரணும் லக்ஷ்மி...?" நம்ம வீட்டு ஆம்பிளைங்க ஒழுங்கா இருந்ததிங் சொன்னா, ஒழைச்சு தந்தா நாங்களும் வீட்டுல இரிக்கலாம். எப்பயும் ரணதுங்க குடிச்சிட்டே இரிக்கிறது. அவன்ட சல்லில குடிக்கிறது போதாதுனு என்கிட்டயும் சல்லி கேட்டு சண்ட பிடிக்கிறது. சண்ட பிடிச்சி அடிச்சி வெரட்டினா ரெண்டு நாளைக்கு வீட்டு பக்கம் வரமாட்டாங். பொறவு மறுவவும் வந்த சேர்றதின்..." எனக் வேண்டாவெறுப்போடு தன் கணவனைப் பற்றிச் சொன்னாள் பிரேமா அக்கா.

"ம்... அக்கா..." என ஆமோதித்த லக்ஷ்மி ஏதோ ஒரு நினைவுக்கு வந்தவளாக, "எனக்கும் அதே நெலமதான். வாப்பா இரிக்கிற வரைக்கும் எந்த கஷ்டமும் இரிக்கல. வாப்பா மௌத்தான பொறவு, உம்மா எங்கள வளக்க கஷ்டப்பட்டாங்க. கல்யாணம்னு ஒன்ன கட்டிக்கிட்டும் கஷ்டந்தான் பட்டேன். சந்தோசமே இல்ல. இரிக்கிற வரைக்கும் ஒழுங்கான ஒழைப்பில்ல... இதுல வேற கள்ள பொம்பளயோட தொடர்பு வேற... சின்னவ வயத்துக்கு வந்ததுமே வீட்ட விட்டு போனவன்தான். திரும்பி வரவேயில்ல. இரிக்கானா... இல்ல மௌத்தாயிட்டானா... ஒண்ணும் தெரியாது. புருசங்கிறவன் நாலு காசு தேடித் தந்து ஒழுங்கா வாழ்ந்திருந்தா நாங்களும் ரோட்டுக்கு வந்திருக்க மாட்டோம். என்னக்கா சொல்லுறீங்க....?

என நிறுத்திய லக்ஷ்மி, பிரேமா அக்காவின் பதிலை எதிர்பார்க்காது தொடர்ந்து... "நல்லா இரிக்கிற எவனும் இல்ல எவளும் இந்த வேலைய செய்ய வருவாங்களா? அசிங்கம், அவிஞ்சதுகள அள்ளனும். ஊத்த நாத்தம் தாங்க முடியறதில்ல. ஒரு சில நேரம் சத்தியும் (வாந்தியும்) வந்திருது. சாப்பிடக் கூட முடியிறதில்ல. வெளிநாட்டுல இந்த வேலை செய்ற எல்லாருக்கும் கைல காலுல போட ஒறை குடுக்கிறாங்களாம். ஆனா எங்களுக்கு அப்புடியா? கொஞ்சம் பேருக்கு குடுத்தும் மிச்சம் பேருக்கு குடுக்காமலும்... எல்லாம் இந்த வெத்து கையால செய்றதுனால நோய்தான் வருது. சவல்' விளக்குமாறால அள்ளினாலும் அசிங்கம்தானே அக்கா. ஊத்த பேக்குல தூக்கினாலும் கைல படத்தானே செய்யும்...." என நீண்ட சொற்பொழிவொன்றை ஆற்றியவள் போன்று தனது பேச்சை நிறுத்திவிட்டு மூச்சு வாங்கினாள் லக்ஷ்மி.

"ஆமா லக்ஷ்மி. நானும் கேள்விப்பட்டதுதாங். வெளியூருல அவங்களுக்கு எல்லாம் நல்ல வசதியா செஞ்சு கொடுத்திரிக்கிறது.

குனு' அள்ளுறவங்க போலவே இரிக்கமாட்டாவாம். எங்களுக்கு அதிங் போல எல்லாம் வேணாம். சும்மா கொஞ்சம் தந்தாலே போதுமேடி...."
எனத் தன் பங்குக்கு கொச்சைத் தமிழில் ஆதங்கப்பட்டாள் பிரேமா அக்கா.
இப்படியாக இருவரும் தாம் செய்யும் தொழிலின் குறைகளையும் கவலைகளையும் கதைத்துக் கொண்டிருந்தனர்.
"மே... மல்லி.. வெலாவ கீயத?" (தம்பி... எத்தனை மணி?)" என பிரேமா அக்கா அவ்வழியே சென்ற ஒரு இளைஞனிடம் கேட்டாள். "தென் தொலஹய்' (இப்போ பன்னிரெண்டு)" என பதில் அளித்தவாறு அவர்களைக் கடந்து சென்றான் அந்த இளைஞன்.

அதைக் தேட்ட பிரேமா அக்கா, "சரி... இனி பகலாயிடிச்சி... போய் மறுவ அந்திக்கி வரணுங்... ஒனக்கும் இன்டைக்கி அந்திக்கி டியூட்டி இரிக்கிறது தானே...? என லக்ஷ்மியைப் பார்த்துக் கேட்டாள்.
"ஆமாக்கா... இரிக்கி..... எந்த மழன்னாலும் வெயிலுன்னாலும் வந்தாத்தானே வயித்த கழுவ ஏழும்" ஒடம்புக்கு முடியலன்னாலும் செஞ்சுதான் ஆகணும். இல்லன்னா ஒரு நா(ள்) சம்பளத்துக்கு அடிதான்."

என்று புலம்பியவாறு லக்ஷ்மி எழுந்து நின்று ஆடைகளை சரிசெய்து கொண்டாள். அவளோடு எழுந்து நின்ற பிரேமா அக்கா தன் மடியில் கொட்டியிருந்த பாக்குத்துகள்களைத் தட்டிவிட்டவாறு...


"கவலப்படாத லக்ஷ்மி நாங் சரி புள்ளங்களோட இரிக்கிறது. நீ பாவங்.. கடவுள் ஒனக்கும் ஒன் புள்ளங்களோட வாழ வழி செய்வாங். நாங்கபடு கஷ்டத்தெல்லாம் அவன்தான் போக்கனும்."

என லக்ஷ்மிக்கு ஆறுதல் கூறியவாறு பாதையின் ஓரத்தில் நிறுத்தியிருந்த குப்பை வண்டிகளைத் தள்ளிக் கொண்டு இருவரும் நடக்க ஆரம்பித்தனர்

"குப்பை வண்டியுடன் சுற்றும் இவர்கள் வாழ்க்கை குப்பையல்ல..... இன்னும் சொல்லப் போனால் அவர்களின் அந்தரங்கங்கள் தூய்மையானவை. இவர்களும் மனிதர்கள்தான் என்பது மற்றவர்களுக்கு என்று புரியும்?". புரிந்தால் மண்ணில் எல்லோரும் மனிதர்களே.

இளைஞர்களே!
நீங்கள் உயரப் பறக்கும் ராஜாளிப்பறவைகள்...
ஓய்வெடுத்துக்கொள்ள பஞ்சனைகளை விரும்பாதீர்கள்...
மலை உச்சியில் உங்கள் கூடுகளை கட்டிக்கொள்ளுங்கள்.
- கவிஞர் அல்லாமா இக்பால்

## ஆடல் காணீரோ!



கொழும்புத் தமிழ்ச் சங்க மண்டபத்தில்
**மலையகக் கல்வி அபிவிருத்தி மன்றம்**
நடாத்தும் முப்பெரும் விழாவில்
நடன விருந்தளிக்கும் "சாஸ்த்ரா பூமி"
நிறுவனத்தின் நடன இயக்குனரான
**செல்வி. அமாலி தீபிகா தஹநாயக்கவின்.**
ஓர் அபிநயத் தோற்றம்

# விருதுகளுக்கு விலைமதிப்பை உண்டாக்கிய மலையக நம்பிக்கை நட்சத்திரம்



நிரஞ்சனி

1989ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 19ஆம் திகதி எழில் கொஞ்சும் கண்டி மாநகரின் குண்டசாலையிலுள்ள பலகொல எனும் கிராமத்தில் பிறந்தார் நிரஞ்சனி. பிறந்தவுடன் தந்தையை பிரிய நேர்ந்தது. தாயின் அரவணைப்பிலேயே வளர்ந்தார். சொந்தம் என்று சொல்லிக் கொள்வதற்கு ஒரு மூத்த சகோதரி மட்டுமே.

திகன ராஜவெல தமிழ் தேசியக் கல்லூரியில் எட்டாம் வகுப்பு வரை கல்வி பயின்ற இவர் கண்டி பத்யுதீன் மஹ்மூத் தேசிய மகளிர் கல்லூரியில் A/L வரை படித்தார். இவருள் இயற்கையாகவே அமைந்திருந்த கலை ஆர்வத்தின் காரணமாக 2009இல் சக்தி சூப்பர் ஸ்டாரில் பங்கு கொண்டார். எனினும் இறுதிக்கட்டத்தை எட்டிக் கூட பார்க்கமுடியவில்லை.

இந்தத் தோல்வி இவருள் ஒரு புதிய உந்து சக்தியை உண்டாக்கியது. புதுத் தெம்புடன் ஒவ்வொரு அடியையும் எடுத்து வைத்தார். 2009 இல் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன தமிழ் பிரிவில் நிகழ்ச்சித் தொகுப்பாளராகச் சேர்ந்தார். இங்கேதான் சிரேஷ்ட அறிவிப்பாளர்களில் ஒருவரான "ஒதெல்லோ" புகழ் ரஞ்சனி ராஜ்மோகனின் அறிமுகம் கிடைக்கின்றது. இவர் மூலம் YA TV தயாரிப்பான கண்ணகிபுரம் வானொலி நாடகத்தில் முக்கியப் பாத்திரத்தில் நடிக்கும் வாய்ப்பைப் பெற்றார். இங்கேதான், இதே நாடகம் சிங்களத்தில் ஒலிப்பதிவு செய்யப்பட்ட போது சிந்துஜா என்ற கதாபாத்திரத்திற்கும் குரல் கொடுத்தார். இங்கே தான் தரங்கா - நியோமி போன்றவர்களுடன் இவருக்கு பரிட்சயம் ஏற்பட்டது.

இளைஞர் சேவைகள் மன்றம் தென்மாகாணத்தில் மாகாண மட்டத்தில் நடாத்திய ஒரு நாடக விழாவில் ஒரு சிங்கள நாடகத்தில் தமிழ்ப் பெண்ணின் பாத்திரம் ஒன்றில் நடிக்கும் சந்தர்ப்பத்தை தோழி தரங்கா பிரியதர்ஷினி ஏற்படுத்திக் கொடுத்தார்.

Format என்ற தனது முதலாவது நாடகத்திலேயே தென்மாகாணத்தின் சிறந்த நடிகைக்கான விருதினைப் பெற்றார். 2011ஆம் ஆண்டு இந்நாடகம் தேசிய மட்டத்தில் நடைபெற்ற போது அதிலும் நிரஞ்சனியே சிறந்த நடிகைக்கான விருதைப் பெற்றார். இந்நாடகத்தை இயக்கியவர் தரங்கா பிரியதர்சினி என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீலங்கா யூத் இளைஞர் நாடக விருது விழாவை ஆரம்பித்து முப்பத்து மூன்று வருடங்களாகிய போதும், சிங்கள நாடகத்தில் நடித்து விருது வாங்கிய முதல் நடிகை என்ற பெருமையும், நிரஞ்சனிக்கு சொந்தமானது. இதே ஆண்டில் ஜயவர்த்தனபுர பல்லைக்கழகம் நடாத்திய "எக அஹசய் - எக பொலவய்" (ஒரே வானம் - ஒரே பூமி) எனும் சாஹித்திய விழாவில் இடம்பெற்ற சந்திராதித்திய நெறிப்படுத்திய Reality நாடகத்தில் நடித்து சிறந்த துணை நடிகைக்கான துணை விருதினையும் பெற்றார்.

2012இல் அரச சிறுவர் நாடக விழாவில் இடம்பெற்ற சிங்கள நாடகத்தில் நடித்து சிறந்த துணைநடிகைக்கான விருதினைப் பெற்றார். Raigam டெலி விருது நிகழ்விலும் அவ்வாண்டின் சிறந்த தமிழ் தொலைக்காட்சித் தொகுப்பாளருக்கான விருதும் இவரைத்தேடி வந்தது. நான்கு வருட கலைத்துறை அனுபவம் இவரை உச்சத்தின் உச்சிக்கு கொண்டு சென்றது.

2013ஆம் ஆண்டின் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் தேசிய ரீதியில் நடாத்திய குறுநாடகப் போட்டியில் எம்.சி. நஜிமுதீன் இயக்கிய அவன் போட்ட கணக்கு இவருக்கு தமிழில் சிறந்த நடிகைக்கான முதல் விருதைப் பெற்றுக்கொடுத்தது. இந்நாடகத்தை எஸ்.ஏ. அழகேசன் நெறிப்படுத்தி அரச குறுநாடக விழாவில் இடம்பெற்றபோது அதிலும் சிறந்த நடிகைக்கான தேசிய விருதை நிரஞ்சனியே பெற்றுக்கொண்டார்.

இவ்வாண்டு நிரஞ்சனியின் கலை வாழ்க்கைக்கு பெருமையும் புகழும் சேர்த்த ஆண்டு. இலங்கையின் முன்னணி திரைப்பட இயக்குனர்களில் ஒருவரான அசோகா அந்தகமவின் இயக்கத்தில் “இனி அவன்” எனும் திரைப்படத்தில் நடிக்கும் வாய்ப்பு கிடைக்கின்றது. சந்தர்ப்பத்தை நல்ல முறையில் பயன்படுத்திக் கொண்டார். இத்திரைப்படத்தின் மூலம் சிறந்த சினிமா நடிகை (தமிழ் சிங்களம் உட்பட) க்கான விருது கிடைக்கிறது. இலங்கை சினிமா வரலாற்றிலேயே நிரஞ்சனிக்கு ஒரு நிரந்தர பதிவு உண்டானது.

இத்திரைப்படத்திற்காக டுபாயில் நடைபெற்ற சர்வதேச படவிழாவில் இவருக்கொரு சிறப்புப்பரிசு, செங்கம்பள வரவேற்போடு காத்திருந்தது. தனியாக எங்கும் செல்லக்கூடாது என்ற தாயின் கட்டளையால் அவ்விருது தடைப்பட்டது. சந்தர்ப்பம் வாசற்கதவை தட்டும்போது அதை பயன்படுத்திக்கொள்ள தவறுவதும் ஒரு பேரிழப்புத்தான்.

தான் பங்குபற்றிய ஒவ்வொரு முதல் படைப்பின் மூலம் விருதுகளைப் பெற்று கொண்ட முதல் நடிகை என்ற முத்திரையை பதித்துள்ள நிரஞ்சனி பிறந்த மண்ணுக்கு பெருமையை உண்டாக்கியவள் இந்த மலையக நட்சத்திரம்.

இது பற்றி அவரிடம் கேட்ட போது, என்னை இயக்கிய எல்லா இயக்குனர்களையும் எப்போதும் நான் நன்றியோடு நினைத்துப்பார்க்கிறேன். அதே நேரம் நடிப்புப் பற்றிய நுணுக்கங்களையும் இன்னும் நடிப்பில் நான் பெறவேண்டிய அனுபவங்களையும் முதுகலைஞரான கலைச்செல்வன் சார் இடத்திலேயும், புகழ் பூத்த சினிமா இயக்குனரான அசோகா அந்தகம சார் இடத்திலும் இருந்து நான் தெரிந்து கொண்டேன். அவர்கள் இருவரையும் என் இரு கண்களாக கருதுகின்றேன்” என மனம் திறந்து கூறினார்.

வந்த வழி மறவாதிருப்பவர்களுக்கு
எல்லா வாசல்களும் திறந்தே இருக்கும்.


முப்பெரும் விழா
வெற்றி காண
எமது நல்வாழ்த்துக்கள்!



LION அ. முத்தப்பன் செட்டியார் JP
தலைவர்

இந்திய வம்சாவளி
மக்கள் முன்னணி

இல. 111, செட்டியார் தெரு,
கொழும்பு 11.
தொலைபேசி : 2439178
கைபேசி : 0775003844

# வாழ்நாள் சாதனையாளருக்கு சான்றோர் விருது

அரங்கு என்பது பொழுது போக்குவதற்கான கடற்கரை மணல்வெளி அல்ல, பொழுது புலர்வதற்கான கிழக்குச் சமவெளி, என்பதை புரிந்து கொண்டு அரைநூற்றாண்டுக்கும் மேலாக ஈழத்துக் கலைத் துறையில் வலம் வருபவர், கலைஞர் கலைச்செல்வன்.

வானொலி, மேடை நாடகம், சினிமா போன்ற துறைகளில் தன் ஆற்றல்களை அடையாளப்படுத்தி யிருப்பவர், விருதுகளால் வீட்டை அலங்கரித்து வைத்திருப்பவர். அரச சாஹித்திய விருதுகளைக் கூட இவர் விட்டு வைக்கவில்லை.

இளைஞர் சேவைகள் மன்றத்தின், டிப்ளோமா சான்றிதழுக்கான அரங்கியல் செயல்முறைப் பயிற்சிப் பட்டறையில் வளவாளராக இருந்து இளங் கலைஞர்களை வெளிச்சத்திற்கு கொண்டுவருவதில் மும்முரமாக இருப்பவர்.



இவரது அரங்க ஊழியத்தில் இன்னுமொரு பரிமாணம், அரச நாடகக் குழு உறுப்பினராக இருந்து அரச சிறுவர் நாடக விழா - அரச குறு நாடக விழா ஆகியவற்றை ஆரம்பித்து நடத்தியமையாகும்.

கலைஞர் கலைச்செல்வனின் சுய ஆக்கமான சிறுக்கியும் பொறுக்கியும் நாடகத்திற்கும், தழுவலாக்கல் நாடகமான ஷேக்ஸ்பியரின் "ஒதெல்லோ" நாடகத்திற்கும் இடையில் பாரிய வளர்ச்சி தென்படுகின்றது எனவும், அதனை ஆய்வுசெய்யவேண்டு மெனவும் கூறுகிறார் பேராசிரியர் மௌனகுரு. இவரது "ஒரு கலைஞனின் கதை" என்கின்ற நாடகத்தை தஞ்ஞாவூர் பல்கலைக்கழகத்தின் அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித்துறை ஆய்வுக்கு எடுத்துள்ளமை இவரின் அரங்கியற் புலமைக்கு சான்றாகும்.

கலையே வாழ்வாகவும், வாழ்வே கலையாகவும் வாழும் வாழ்நாள் சாதனையாளரான கலைஞர் கலைச்செல்வன் அவர்களுக்கு சான்றோர் விருது வழங்கி கௌரவிப்பதே கலைத்துறையைச் சார்ந்த அனைத்துக் கலைஞர்களுக்குமான கௌரவமாகும்.

"கொழுந்து"ம் கலைஞரை வாழ்த்தி மகிழ்கிறது.

## பெண் எழுத்தாளர்களுக்கான சிறுகதைப் போட்டி முடிவுகள்

கொழுந்து சஞ்சகையின் ஏற்பாட்டில் அமரத்துவம் அடைந்த மலையகச் சமூக சேவகி இராஜேஸ்வரி கிருஸ்ணசாமி ஞாபகார்த்த பெண் எழுத்தாளர்களுக்கான சிறுகதைப் போட்டியில் 65 பெண் படைப்பாளிகள் பங்குபற்றினர்.

சிறுகதைகள் மக்களின் வாழ்வியலையும், பெண்களின் பிரச்சனைகளையும் உள்ளடக்கமாக கொண்டிருக்கவேண்டும் என்ற, விதிகளுடன் போட்டி நடத்தப்பட்டது. சிறுகதைப் போட்டிக்கு முழுபரிசுத் தொகை ரூபா 25,000 என்றும் முதற்பரிசு 10,000, இரண்டாம் பரிசு 5,000, மூன்றாம் பரிசு 3,000 மற்றும் சிறப்பான ஏழு சிறுகதைகளுக்கு தலா ரூபா 1,000 வீதம் வழங்கப்படும் என்றும் அறிவித்திருந்தோம்.

பரிசு பெற்ற படைப்பாளிகளும் விபரங்களும் வருமாறு : முதற்பரிசு : கார்த்திகாயினி சபேஷ் - தீர்ப்பு, இரண்டாம் பரிசு : கல்லாறு மீராவதி ராஜுஷன் - பஞ்சுக்கனா பற பற, மூன்றாம் பரிசு : கொழும்பு ஆஷிகா - குப்பை வண்டி. மற்றும் சிறப்புக்கதைகளாக பரிசுபெறுபவை : வவுனியா மைதிலியின் பெண் என்று, சங்கானை உதயலதாவின் சிரச்சேதம், திருக்கோவில் யோகா யோகேந்திரனின் குற்றம் என்ன நாம் செய்தோம், மட்டக்களப்பு ஹஜேந்தினி மைக்கலின் உணர்வுகளின் ஊர்வலத்தில் கொழும்புச் சந்திரகாந்தா முருகானந்தத்தின் ஒரு தாயின் கனவு, கொழும்பு பர்கான் பீ. இப்திகாரின் பொட்டு வைத்த கற்கள், பதுளை எஸ் தர்ஷிகாவின் உழைக்க மட்டும் பிறந்தவர்கள் ஆகியவையாகும். இவர்களுக்கு 10.11.2013 அன்று கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் சான்றிதழும் பணப்பரிசும் வழங்கப்படுகின்றது.


முப்பெரும் விழா சிறப்பாக நடைபெற
வாழ்த்துகின்றோம்.
சங்கீதா
ஜுவல்ஸ்
සංගීතා
ජුවල්ස්
T.PHONES:
011 2500682
011 2361321
Sangeetha
JEWELS
335-C
GALLE ROAD, WELLAWATTE,
COLOMBO - 06.


வெள்ளிதோறும்
துள்ளிவருகிறது
மலையகம்.lk News
வெள்ளிக்கிழமைதோறும்
அதிகாலையில் உங்கள் அபிமான
பத்திரிக்கை விற்பனையாளரிடம்
மலையகம்.lk வாராந்தரியென
கேட்டுவாங்குங்கள்.
இளைய மலையகத்தின் எழுச்சிக்குரல்
மலையகம்.lk
www.malayagam.lk


தரமான
தங்க நகைகளுக்கு
உத்தரவாதம்
கிரவுண்
ஜூவல்ஸ்
Best Wishes
From :
CROWN
JEWELS
Dealers In 22kt Gold Jewellery
76a, Sea Street, Colombo 11. Tel : 2323937, 2337545 Fax : 2337545
sales@crownjewelsonline.com